யிருக்கப்படுமோ? பாதிரிகள், பதினாயிரம் மயில் தூரமிருந்து லக்ஷம் லக்ஷமாய்க் கொண்டு வந்து எல்லோரும் கிறிஸ்தவராக்க, மதவிருத்தியின் பொருட்டு எத்தனையோ லக்ஷம் ஆஸ்தியாக் வைக்கப்பட்ட மடத்தில் குருமார், தமக்குரியஅக்காரியங்களை உள்ளூரிலிருந்து பண்டிதரைக் கொண்டும் செய்யாது வாளாவிருப்பதைப் பற்றிக் கேட்க வேண்டுவது நம்மனோர் கடமையன்றோ? மடத்தார் அங்ஙனம் புரியாவிடில் அம்மடம் இருந்தலினால் பயன்யாதோ? இதுவிஷயத்தில் நம்மவர்க்கு என்று கோபமுண்டுமோ, என்று உரோஷம் வருமோ, என்று பேடித்தன்மை ஒழியுமோ, என்று ஆண்மைபெறுவரோ? அன்றுதான் இந்துதேசம் நல்ல நிலைமையில் வந்து மதச்செழிப்படையும்-

பாதிரிமார், எத்தனை ஸ்கூல்களை வைத்துப் பரிபாலிக்கின்றனர்? அவ்வாறு நம்மமடத்தார் அங்கங்கு ஸ்கூல்களை ஏன் வைக்கப்படாது? சம்பளமும் கவர்ன்மெண்டையும் கொண்டு நடத்தலாமே; இரண்டொருவர் ஒருவர் பின் ஒருவராய்எங்கும் ஆரம்பிப்பார்களே; இப்படி நம்மவர் எங்கும் செய்ய ஏற்பட்டுவிட்டால் பாதிரிமார் சகிக்கக் கூடாத வுஷ்ண பூமியை விட்டு, தம் குளிர்ந்த பூமியில் சென்று சுகப்படுவார்களே; இப்படிச் செய்யாமையாலன்றோ அவர் இத்தேசத்தில் கால் வைக்கலாயிற்று?

பாசுசெய்து வேலையில்லாது சும்மா யிருக்கும் அனேகர் ஸ்கூல்களை வைத்து, கல்வியும் கற்பித்து மதத்தையும்போதித்து தாமும் ஜீவிக்கலாமே; மடத்தாரும பிரபுக்களும் இப்படிப்பட்டவரைக்கொண்டு வெகு வேலை நடத்தலாமே; பெரியமடத்தார் யிப்படிப்பட்ட வேலைக்கு ஆரம்பித்தார்களாயின், அனேகர் பண உதவியும் செய்வார்களே! செல்வாக்கும், அந்தஸ்தும், நம்பிக்கையும், கல்வியும், நுட்பபுத்தியுமுள்ளவரெல்லாம் பரோபகார சிந்தையின்றிச் சும்மாவிருந்து விட்டால், யாதொன்றுமில்லா எம்போன்ற ஏழைகள் என்னசெய்வார்கள்? இவ்விஷயத்தில் தக்கவர் மனமிரங்கவேண்டும்; உபகாரம் புரியவேண்டும்; நாவசைந்தால் நாட்டையசைக்கவல்லவரெல்லாம் தமக்கென்ன வென்றிருக்கப்படாது; பாதிரிகள் செய்யும் மோசம் மெத்தபெரியது; அதைக்கவனிப்பாரில்லை; யாரெப்படிப் போனாலும் நமக்கென்ன,, என்னும் இம்மொழி,பண்டிதரிடத்தும் பாமரரிடத்து மிருப்பதோடு செல்வரிடத்தும் தரித்திரரிடத்தும் சம்பூர்ணமாய்க் குடிகொண்டிருக்கிறது- இம்மொழி யித்தேசத்தை நாசம் செய்ய வந்த பீரங்கியாக்கும்- இப்பழமொழி நமது நாட்டைவிட்டு என்று ஒழியுமோ, அன்றுதான் நாம் எவ்வாற்றானும் சீர்படுவோம்- இதுகல்வியாலும், பத்திரிகைகளாலும், சபைகளாலும், ஐக்கியத்தாலுமன்றி மற்றொன்றாலும் ஒழியாது-

கிறிஸ்துமதம், நமது புராணங்களிலிருந்து எழுதியதென்பது பிரத்தியக்ஷமாயிருப்பதுடன், பலஐரோப்பியரும், அமெரிக்கரும், புத்தகம் பத்திரிகை பிரசங்கம் இவற்றின் வழியாய் விறையடிக்கவும், அவற்றையெல்லாம் துடைத்துவிட்டு மகம் மேருமலையான இந்துமதத்தைத் தூஷித்து, இந்துக்களைக் கிறிஸ்தவராக்குவது எவ்வளவு நியாயம்? ஒருபக்கத்தில் கண்டிக்கின் மற்றொருபக்கம் புறங்காட்டும் ஓடும் போதகரை, நம்மவர் வெல்ல வெகு கல்விவேண்டுமோ? ஆயிரம் யிடத்தில்மானங்கெட்டாலும் அதைலக்ஷியஞ் செய்யாமல் எப்படியாவது சொக்குப் பொடி போட்டுக் கிறிஸ்தவராக்குகின்றமைக்குக் காரணம் பொருள், பூவை, ருசி யிவைதான- மற்றப்படிபைபிலில் என்ன விருக்கிறது? மிஷன்ஸ்கூலில் கற்கும் நமது சிறுவரைக் கேட்டால் வெட்ட வெளிச்சந்தான்- கடவுள், முதல் நாளில் வெளிச்சத்தையும் மூன்றும் நாளில் சூரிய சந்திர நக்ஷத்திரங்களையும் படைத்ததையும், உலகம்உண்டாகக்கடவதென்று கூறும்போதே வாயும், வாயுள்ள போதே சரீரமும், சரீரமுள்ள போதே அதன் காரணமான வுலகமுமிருக்கவும் மீண்டும் உலகம் உண்டான அதிசயமும், விலங்கு பறவை முதலியவற்றிற்கு ஆத்துமா யில்லை என்ற விநோதமும்மற்றுமிவை போன்ற அற்புதங்களை யெடுத்துக் கூற எவராலாகும்? பராபரன் தான் வரவேண்டும் போலும்- பேஷ்! பேஷ்!! இந்துமதத்தை வெல்வது இதுதான், பி-எ-க்களே! பாருங்கள்! பாருங்கள்!!

மதம் அழியவும், இந்துதேசம் தரித்திரப்பட்டு வாடவும்பார்த்திருப்பது கருணையுடையார்க்குஅழகாமோ? பரோபகாரமாமோ? இந்துநேசர்களே! இதைப்பன் முறையுங் கூறியதாகப்பாவித்து இனி வாளாவிராது தக்கவாறு யோசித்து, விரைவில்நன்மை செய்யுங்கள்! மறவாதேயுங்கள! உங்களபிப்பிராயத்தைத் தெரிவியுங்கள்!

ஓர் நிருபநேசன்-

## கையொப்பவரவு

| பெயர் | ஊர் | ரு | அ |
|---|---|---|---|
| அ- சபாபதி சிவாசாரியார் | பார்வதீபுரம் | க | கஉ |
| வெங்கிட்டராமய்யர் | மாயவரம் | க | கஉ |
| பவானி பண்டிதர் | சேலம் | க | அ |
| எ. சி. முருகேசமுதலியார் | ஷெ | க | கஉ |
| டி- எ- அனந்தராமய்யர் | திருநெல்வேலி | க | கஉ |
| நஞ்சுண்டசெட்டியார் | கிருஷ்ணகிரி | க | கஉ |
| வி- வைத்திநாதைய்யர் | சேலம் | க | கஉ |
| பி- வெங்கிடகிரி ஐயர் | ஷெ | க | 0 |
| பி- வெங்கிடசாமி நாயிடு | ஷெ | க | கஉ |
| பி- டி- சுப்பிரமணிய அய்யர் | ஷெ | க | கஉ |
| வைத்திநாதய்யர் | சின்ன சேலம | க | கஉ |
| வி- எக்கியராமஐய்யர் | | க | கஉ |
| என்-வீராசாமிஐய்யர் | ஷெ | க | கஉ |
| என்- வி- சீனிவாசய்யங்கார் | ஷெ | க | கஉ |
| என்- ராமசாமிஐய்யர் | ஷெ | க | கஉ |
| வெங்கிடாசாரியார் | ஷெ | க | கஉ |
| சி- வெங்கிடாசாரியார் | ,, | க | கஉ |
| சாமிஐய்யங்கார் | ,, | க | கஉ |
| மீனாக்ஷிசுந்தரமய்யர் | மதுரை | க | கஉ |


# ப்ரஹ்மவித்யா.

## ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலிஷ்௴ ௨௰௮ சிதம்பரத்லிருந்து பிரசுரம் செய்யப்படும்

புத்தகம் க.] ௧௮௮௭௵ பிப்ரவரி ௴ ௨௮- [இலக்கம்- ௯


### தேயத்ரவ்யவழிகா

| ஹிந்தூதேஶஸ்ய | | | லங்காயா | | |
|---|---|---|---|---|---|
| ஸம்வத்ஸரஸ்ய | க | ௰௨ | ,, | ௨ | ௪ ,, |
| மாஸஷட்கஸ்ய | க | ,, | ,, | க | ௪ ,, |
| மாஸத்ரயஸ்ய | ,, | ௯ | ,, | ,, | ௰ ,, |
| ஸஞ்சிகாயா: | ,, | ௩ | ௬ | ,, | ௪ ,, |

### சந்தா விவரம்

| | இந்தியாவிற்கு- | | | | இலங்கைக்கு- | | |
|---|---|---|---|---|---|---|---|
| வரு | 1- இ | 1 | 12 | 0 | 2 | 4 | 0 |
| ௬ மா | 6 - இ | 1 | 0 | 0 | 1 | 4 | 0 |
| ௩ மா | 3 - இ | 0 | 9 | 0 | 0 | 10 | 0 |
| காபி | 1 - இ | 0 | 3 | 6 | 0 | 4 | 0 |


கஸ்சிதுபந்யாஸ: ௱௨௰௯
குதர்க்காசலகுலிஶப்ரத்யுத்தரம் ௱௩௰௬
மதஸ்ய தத்ப்ரயோஜநஸ்ய தத்ப்ரவர்த்தகஸ்ய ச [க்ரமஶ:] ௱௩௰௯
ஸம்ஸ்க்ருதபாஷாபுராணம் ௱௪௰௨
ஆத்மா ச ஶரீரம் ச ,,
ஸ்மார்த்தப்ராஹ்மணாநாம் உத்பத்திகாரணம் ௱௪௰௪
வேதஶாஸ்த்ரதரங்கிணீபாடஶாலா ௱௪௰௫

ஓர் உபந்நியாசம் ௱௨௰௯
குதர்க்காசலகுலிசத்திற்கு விடை ௱௩௰௪
மதமும், அதின் பிரயோசனமும், அதின் ஆசிரியநும்- [முன்தொடர்ச்சி] ௱௩௰௯
ஸம்ஸ்கிருதபாஷைபுராணம் ௱௪௰௨
ஆத்மாவும், சரீரமும். ,,
ஸ்மார்த்தப்பிராமணர் உட்பிரிவின்காரணம் ௱௪௰௪
வேதசாஸ்திரதரங்கிணிபாடசாலை ௱௪௰௫



இஃது சிதம்பரம்ப்ரம்மவித்தியா ப்ரேஸ்தலைவரால் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்டது-

## இத்தேசத்தார் கவனிப்பு.

இத்தேசத்திலுள்ள கைத்தொழிலாளர்க்குத் தினே தினே வேலையின்றி ஜீவனம் மட்டுப்படுகின்றது. இதற்குக் காரணம் அங்கிலே நாட்டிலிருந்து இத்தேசத்தார்க்கு வேண்டிய நூல், துணி, காகிதம், பென்சல், பென், கத்தி, பிரஸ், மை, கண்ணாடி, பீங்கான், பயர் பாக்ஸ், முதலிய லக்ஷாதி லக்ஷம் சாமான்கள் வந்துவிட்டமையே. முற்காலத்தில் எப்படியாயினும் சோற்றுக்குக் குறைச்சலில்லை. இப்போதோ பிண்டம் பெருங்காயமாய் விட்டது. படித்துத் தேறிப்பாசு செய்து உத்தியோகம்உத்தியோகமென்று எங்கும் அலைந்து திரிகின்றனர். யாவர்க்குமே கவர்ன்மெண்டார் உத்தியோகம் எங்கிருந்து கொடுப்பர்? இந்தியாவிலுள்ள 25. கோடி ஜனங்களுக்கும் இங்குள்ளாரே சாமான் செய்யப் புறப்பட்டால் பிழைப்புண்டாகும். சீமையிலுள்ள 3. கோடி ஜனங்கள் இந்தியாவுக்குச் சாமான் செய்தலினாலும், வர்த்தகம் புரிவதினாலுமே குபேரரானார்கள். இவர்க்கு அவையில்லாமையினாலேயே தரித்திரரானார்கள். ஐரோப்பா கண்டத்தில் கவர்ன்மெண்டாரே முன்னின்று கைத்தொழில் சாலைகள் ஸ்தாபித்து, அதற்குரிய வித்தையையும் கற்பித்து, யந்திரங்கள் அமைத்து ஜனங்களை ஏவிவிட்டதினால், இப்போது இவ்வளவு விர்த்திக்கு வந்தன. இவ்விடத்தில் நமக்கு அன்னிய அரசாயிருப்பதாலும், இங்கு கைத்தொழில் விர்த்தியாவது அங்கிலேய தேசத்தார்க்குப் பிழைப்பு மட்டுப்படுமென்பதினாலும் நமது கவர்ன்மெண்டார் கவனிக்காமலே யிருந்தார்கள். இதைச்சுட்டி மிஸடர் கிரான்டப் கவர்னர் நாளில்பத்திரிகைகளும், கிருபகேசரும் காது செவிடுபடக் கூக்குரல்போட்டும் பயன்படவில்லை. இப்படி யிருக்க, மிக்கதயாளகுணசம்பன்னரான புதுக்கவர்னர் மிஸ்டர் ராபர்ட்போர்ட் அவர்கள்கைத் தொழிலைப் பற்றியே சிந்தித்துச் சமயம் பார்த்து மகா ராணி யாரவர்கள் 50. வது வருஷத்து மகோற்சவத்தில் எப்படியாவது முடிக்க வேண்டுமெனக்கருதி, தொகைசேர்ப்பிக்கப்பண்ணி, கைத்தொழில் சாலையும், அதன் வித்தையும் ஸதாபிக்க முயன்றார். இதற்குச்சுமார் லக்ஷம் ரூபா வசூலாயிற்று. விஜயநகரமகாராஜா அவர்கள் பதினாயிரமும், ம-ா-ா ஸ்ரீ சவலை-ராமசாமிமுதலியார் ஸி. ஐ. இ. அவர்கள் பதினாயிரமும், மற்றவர் அவரவர்களுக்கு இஷ்டமும் சத்தியும் எப்படியோ அப்படித்தந்தார்கள். ஷெ இருவர் தந்ததே பெரியதொகை, இதில் பிப்ரவரிமீ 16உ வருஷோற்சவத்தில் செலவானதும் சீமை கைத்தொழில் சாலைக்கு அனுப்புவதும் போகமீதி கைத்தொழிற் சாலைக்கு வைப்பார்கள். இந்தத்தொகையில் என்னகாரியம் நடக்கும்? ஜுன் 20உ மீண்டும் நடக்கப் போகிறது. அதற்குள்ளாக எங்குமுள்ளவர்களும் சகாயம் செய்தால் ஷெ சாலை சென்னையில் வைப்பதோடு வெளி ஜில்லா தாலுகாக்களிலும் வைப்பார்கள். இதனாலே தான், நமது தேசத்தார்க்குக் கைத்தொழிலும் வர்த்தகமும் அதிகரித்து, குபேரராவார்கள். இத்தேசத்திற்கு நல்ல காலம் வந்தமையாலேதான், நல்ல கவர்னரும் கிடைத்து, அவராலே க்ஷேமகரமான ஐசுவரியத்தையும் பெறப்பார்க்கிறது. தற்காலம் ஒருகோடிரூபா சேர்ந்தால் போதும். இத்தேசத்தார் இது விஷயத்
ன்றாய் ஆலோசிக்க வேண்டும். அவரவர்க்கு இயன்ற மாத
ம் தரலாம். கொடாதவரைப் பலாத்காரம் செய்வாரில்லை
வ்வொரு ஊரிலும் இதுவிஷயமாக அபிமானமும், ஏழை
டத்துப் பக்ஷமுமுள்ளவர், சிறிது இடுப்புக்கட்டிக்கொண்
யன்று நிதிசேகரிக்க வேண்டும்; இதுதான் சமயம். கவ
மெண்டார் மனசில் படுவதே கஷ்டம், பட்டும் பயனற்
போனால் மற்றொரு கவர்னரால் இது ஆவதில்லை. ஜனங்க
நன்றாய்ச் சிந்தியுங்கள்! நமது தேசத்துப் பணக்காரர்க்கு
ரியம் இன்னதென்று தெரியவில்லை; எத்தனைதான்எடுத்
டுத்துக்கூறினும் உறைப்பதில்லை. நாளை யமனுக்கு ஆளாய்ப்
போகும் அக்காலத்தும் ஒருவர்க்கும் ஒருகாசும் தராது பேச்சற்றுப் போனால், அப்போது அனுபவிப்பர் யார்? பிறகு, அவர்க்கும் நமக்குமுள்ள சம்பந்தம் யாதெனச்சிறிது ஊன்றிப் பார்ப்பரேல், ஜனோபகாரமாக ஏதேனும் தருவர். அப்படியோசிக்கக் கல்வியும் அறிவுமில்லையே, என் செய்வது? இதுநிற்க,

இவ்விடத்தில் செய்யப்போகிற சாமான்களாவன

நூல் நூற்றல், துணி நெய்தல், சீட்டி அச்சடித்தல், சாயம்போடல், தோல் பதஞ்செய்தல், சரிகைதிரித்தல், காகிதம் பென்ஸல் மை கண்ணாடி பீங்கான் முதலிய அனேகவஸ்துக்கள் உற்பத்திசெய்யலாம். சிறிது சிறிதாகச் சேரும் பொருளுக்குத்தக்கபடி ஆகும்.

இதுந்துச் சிலஅங்கிலேய கிறிஸ்து பாதிரிமார் கூறுவதாவது-

"கைத்தொழில் சாலை ஏற்படுத்தினால் பிழைப்புண்டாகும். பிறகு, ஏழைகளாயி ருப்பதில்லை, கஞ்சிக்கில்லாவிட்டால் தா ன்கிறிஸ் வராவார்கள், கிறிஸ்துமதம் பலப்பட்டு கிறிஸ்து ஜனங்கள் பெருத்தால் தான் அங்கிலைய கவர்ன்மெண்டு நிலைக்கும், கவர்ன்மெண்டு நிலையானால்தான் அங்கிலேயர்க்கு உத்தியோகத்தாலும் வர்த்தகத்தாலும் கைத்தொழிலாலும் ஜீவனமுண்டாகும், ஆதலால், கைத்தொழில் சாலை ஏற்படுத்தல்தகுதியன்று, ஏற்படுத்தினாலும் கிறிஸ்தவர் அதற்குப்பணம் தரப்படாது முதலியவையே. இதனால் அவர்கருத்தை உணருங்கள்! இத்தேசத்தாரைக் கிறிஸ்தவராக்குவது தமது தேசத்தார் பிழைப்பினிமித்தமெனத் தெள்ளத் தெளிய விளங்குகின்றதல்லவா? பாதிரிமார், இத்தேசத்துப் பணக்காரரைமோசத்தாலும், தரித்திரரைச் சோற்றாலும் கிறிஸ்துவராக்கச்செய்யும் முயற்சி யிவ்வளவெனக் கூறற்பாலதா? நம்மவர், இதைப்பற்றியோசிக்கின்றனரா? சுபோதிகளாகவிருக்கின்றனரே; பலஜாதி மதஸ்தரும் கட்டுப்பாடாயிருந்துகைத்தொழிற் சாலைக்குப் பெருநிதிசேகரித்து, ஜனங்களுக்கு கொடுத்து ஜீவனத்தை யுண்டுபண்ணி, ஒருவரும் கிறிஸ்து மதத்திற்குச்செல்லாவண்ணம் சுயமதத்தைப் போதித்து, எங்கும் தேசக்ஷேமவிஷயமாகவும் மதவிஷயமாகவும் பிரசங்கம் புரிந்து, கிறிஸ்தவரானவரை மீண்டும் சுயமதத்தில் திருப்பி, ஒற்றுமையை உண்டாக்கி, இன்னும் யிவை போன்று பற்பல காரியங்கள் செய்யவேண்டியதவசிய மன்றோ? பிரபுக்கள் என்னசெய்கின்றார்கள்? மதாபிமானிகளெங்கே? பணக்காரர்க்கு இதைவிடச்செய்யும் கிருத்தியம் யாது? பிரசங்கிகள் இப்போது சும்மா

## "தத்துவ விவேசினி"

இத்தலைப் பெயர்கொண்ட பத்திரிகை இச்சென்னையில் நெடுநாளாகப் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றது. மதப்பித்தேறிய அனைவருடைய அஞ்ஞான இருளை ஓட்டச் சகோதரவாஞ்சையுடன் முயலாநிற்கின்றது. அப்பத்திரிகை யொன்று உலவிவருவதனால் யாம் அனைவரும் இறும்பூதெய்தியிருக்தோம். இப்போது ஏழெட்டுமாசகாலமாக அதில் ஆங்கிலேய சாஸ்திர உணர்ச்சியும் ஆரியமதக்கோட்பாட்டின் ஞானமும் அணுவேனும் எய்தப்பெறாத சிலர் எழுதப்புகுந்து அதை மேதியிழிந்த தாமரைத்தடாகமாக்கிக் கெடுக்கின்றார்கள். அந்தோ, பரிதாபம்! பரிதாபம்!! அதுநிற்க. சென்றவாரப் பத்திரிகையிலுள்ள சிலவற்றை எடுத்துரைப்பாம். உண்மையென்னும் மணிவிளக்கினொளியால் நன்மையைக் கண்டுய்யவேண்டியதென்னும் எண்ணத்தை வாஸ்தவத்தில் எவராவது கொண்டிருந்தால், அவர் எவ்வெவ்விடங்களில் தமது கோட்பாட்டுக்கு விரோதமாக எதையாகிலும் எவரேனும் பிரசங்கிக்கின்றாரென்று கேள்வியுற்றமாத்திரத்தில் உடனே அவ்வவ்விடங்களிற் சென்று அவற்றைச் செவியாரக்கேட்டுத் தமக்குள்ள சந்தேகத்தை நேராகவேனும் பத்திரிகை மூலமாகவேனும் கேட்டறிந்து தெரிவது முறையாம். இதுதான் ஆராய்ச்சிசெய்வோரது இலக்கணம். அதைவிடுத்து "ஒரு பிரசங்கியார் இப்படியாகவும் அப்படியாகவும் சொன்னாராம்,, "அவர் சொன்னது அப்படியிருக்கலாம்,, "இப்படியாம் அப்படியாம்,, என்று யாரோ தனக்கு வந்து ஒன்றை மற்றொன்றாகக் குளறிவழிந்ததை நம்பி ஏ. எம். என்கிற ஒருவர் கைக்குவந்தபடியெல்லாம் எழுதித்தொலைத்தார். உண்மையில் ஆராய்ச்சி செய்பவரது இலக்கணம் இப்படியா இருக்கும்? ஆரிய மதவிசாரணை சங்கத்தில் ஆரிய திராவிடபாஷைகளில் மஹாவித்துவான்களும் ஐரோப்பிய சாஸ்திரங்களில் மஹா நிபுணர்களும் ஒன்றுசேர்ந்து நியாயவாயிலாய்ச் சகோதர ஒற்றுமையுடன் தூஷணையை யொழித்து லோகோபகாரமான உபந்நியாஸங்கள் செய்துவருவதை வாரந்தோறும்எம்மதத்தோரும் சம்மதமாகக்கொண்டு கேட்டு மகிழ்கின்றனர். மேலும் ஆங்கிலேய பாஷையிற் கல்வி பயின்று பி. ஏ. பட்டம்பெற்ற பல சாஸ்திர நிபுணர்களும் சிரக்கம்பஞ்செய்து சவாஸ் என மதிக்கின்றார்கள். அப்படியிருக்க "காடு வாவா வீடு போபோ,, என்னும் நிலைமைக்குவந்த கிழங்கள் நேரில்போய்க்கேட்கத் தயிரியமற்றவர்களாய் வாய்க்குவந்தபடி யெல்லாம் வரைந்து போதுபோக்காநிற்பர். அந்தோ யாவரும் வியக்கத்தக்க நிரீஸ்வரவாதிகள் கூட்டத்துக்கும் அவர்களுடைய அற்புதமான "தத்துவவிவேசினி,, என்னும் பத்திரிகைக்கும் கவுரவதோஷம் சம்பவிக்கின்றதே. ஆங்கிலேய சாஸ்திர உணர்ச்சியற்ற இப்படிப்பட்டவர்களுடைய சேர்க்கையால் மெய்யறிவு என்னும் சுவடியை எடுத்துக்கொண்டு அந்த எ. எம். என்பவர் அதின் வாக்கியங்களைக் கண்டிக்கச்சொல்லுகிறார். ஆராய்ச்சி என்னும் உண்மை நெறியில் நின்றுமான தபதார்த்த சொரூப லக்ஷணங்களை முழுதும் உணர்ந்து ஏதோ சிலகாரணத்தால் சிறிது மதிமயங்கிப்போன பென்தாம், ஹியூ, மில், வோல்டேர், ஸ்பென்ஸர், மிஸ்டர் பிராட்லா, டாக்டர் பெயின், ஆகிய மானிட சிரோன்மணிகளுடைய அற்புத புஸ்தகங்களை யெடுத்துக்கொண்டு ஒவ்வொரு அம்சத்திலுமுள்ள வழுக்களைக்காட்டி, அவற்றில் தேர்ச்சியடைந்து பெரிய பரீக்ஷைகள் கொடுத்த விவேகிகளும் "சரி,, என்று ஒப்புக்கொள்ளும்படியாக உபந்நியசித்துவருகிற ஓர்சபையில் "மாடமாளிகைகூடகோபுரங்களெல்லாம்பறக்கும்போது எச்சிற்கலை எனக்கென்னகெதி என்று கேட்டதுபோல் மெய்யறிவுப் போலிச்சுவடி முன் நிற்குமோ? அதிலுள்ள வழுக்களை எடுத்து நெடுநாள் முன்னரே பிரசித்தப்படுத்தி யிருப்போம். "ஊர்க்குருவி மீது இராமசரமா,, என்று பரதவித்தே சும்மா யிருந்துவிட்டோம். யாம் ஐந்து ஆறுமாச முன்னர் எம். ஏ. பட்டம்பெற்ற ஒரு சிறந்த கனவானிடத்து வார்த்தையாடிக் கொண்டிருந்தபோது இச்சிறு சுவடியை ஒருவர்கொண்டுவந்து அவர் கையில் கொடுத்தார். அது மெய்யறிவு முதல்பாகம். அதை அந்த கனவான் திறந்து பார்த்தபோது "பூதக்கண்ணாடியில்-தண்ணீரை நாம் பார்ப்போமானால் அதில் தேள் சிலந்தி முதலியது இருப்பதைக்காண்போம்,, என்று பொருள்படுகிற ஓர் பூதசாஸ்திர அபக்தவாக்கியத்தைக் கண்ணுற்று "இவர்கண்ணுக்குச் சலத்தில் தேள் அகப்பட்டது விந்தையினும் விந்தை. அப்படிப்பட்ட பூதக்கண்ணாடியை யான் கேட்டதேயில்லை. இன்னுங்கொஞ்சம் ஏபார்ந்திருந்தால் தேளேயல்ல, கரடி, புலி, சிங்கம், யானையைக் கூடத்தான் கண்டதாகப் பொய் உரைப்பார்போலும். இங்கிலீஷ் சாஸ்திர உணர்ச்சியில்லாதவர்கள் ஏன் இந்தக் காரியங்களில் தலையிட்டுக்கொண்டு தங்கள் அறியாமையை வெளியிடுகிறார்கள்,, என்று துக்கித்து அதைத் திரஸ்கரித்தார். அதைக்கண்டும் அதின் உண்மையை யறிந்தும் அந்தச்சுவடியை ஓர் பொருட்படுத்தி விவேகிகள் விவகரிப்பார்களா? ஆயினும் அந்நூலாசிரியர் இரந்து கேட்டுக்கொள்வதினால் அவர்பொருட்டு யாம் கருணைகூர்ந்து, இன்னும் ஒருமாசத்தில் ஆரியமத விசாரணசங்கத்தார் வெளியிடப்போகிற "ஆரியமதவிசாரணி,, என்கிற பத்திரிகையின் ஆரம்பத்திலேயே அவர்களுடைய அனும
தியினால் அவருக்கு வழுக்களைக்காட்டி அவர் மன இருளை
டி உண்மையை நாட்டுவிப்போம். அந்தோ அவர் மன
ஓட்டுவது எங்ஙனம் இசையும்! அவர் கொண்ட
ராக்கும். ஆரியமத விசாரணசங்கத்தில் பிரசங்
தநாள்தொடங்கி யாம் விடாது போய்க்கொ
நாஸ்திகர்களை நன்றாய்ப் பேசிப் புகழ்ந்
ர்களுடைய கோட்பாடுகள் அபாயகர
யும் தூஷணையை முற்றுமே ஒ
தை நாஸ்திகக்கோட்பாட்
ம் புகழவிருக்கிறதே. அப்ப
ராம்,, "இவர் இப்படி செ
லாம்,, என்று ஐயந்திரி
ற்களையே நம்பித்தூஷித்
யுடையாரது மரபன்று.
எம். வரைந்துள்ளார். குண்
பிக்கை வைத்த சத்புருஷ
றேர் வசனத்தில் அதில் ஆ
த்தால் கடைத்தேறி உய்யலாமே.
ல் உபந்நியாசஞ்செய்கிற விற்பனனை

ஏனையோர் புகழ்ந்தாலென்? அவமதிப்புமான்றமதிப்புமிகை மக்களான் மதிக்கற்பால் . . . .

(நாலடியார்) அவ்விடத்தில் சொல்லப்பட்ட விஷயங்களின் சந்தர்ப்பாசந்தர்ப்பங்களை யறியாமல் கண்டபடி தூஷித்தெழுதுவது கற்றோர் இலக்கணமன்று.

இங்ஙனம்.
சி. இராசரத்தின முதலியார்.
பி. இரத்தின முதலியார்.
ஸ்ரீசுதேசாபிமானி

---

[illegible]

---

[illegible]

பத்திரிகையில்
விளம்பரமுதலியவை அச்சிடும்
கூலி விகிதம்-

வரி 1-இ முதல்முறை அச்சிட அணா-2. இரண்டா …முறை அச்சிட அணா-1. பின்பு எத்தனைமுறை அச் …ம் அத்தனைமுறையும் வரி ஒன்றுக்கு அணா அரை. …ாமுதலியவைகள் பத்திரிகையின் மேற்காகிதத்தி …ப்படும்.

சிதம்பரம்
…ந்தியா யந்திரசாலையில்

… முதலியவைகளில் புத்தகங்கள், …லாமினேஷன் பேபர்கள், பில் …ப்புவேலைகளை வெகு நேர்த் …துக் கொடுக்கப்படும்.

…மாய் புஸ்தகங்கள் வாங் …டையோர் தங்கள் புஸ்த … 1-இ கமிஷன் அணா …ாகையை சொந்தக்காரர்

…த திபிகை.

…பின்களுள வனுஜிபாய வுபநிடத …றமுறைவகுத்த முனிமன்னராய வேதவியாசபகவானருளிய மாபாரதமெனும் புருடனிருதய லம்போன்ற பதினெண்ணத்தியாயங்க ளடங்கியதும், பகவ ரைத்ததுபற்றிப் பகவற்கீதையெனும் பெயர்பெற்றிராநின்ற மாய சிறந்தவோர் உபநிடதமும், அதற்கு மும்மதத்தாசிரியருளிய பாடியங்களையு மனுசரித்து வரைந்திருக்கும் ஓர் செ தமிழுரையுமுளவோர் நூல். இதனை அந்நூலாசிரியராய கோயமுத்தூர் குப்புசாமிஐயரவர்கள்எமதிடம் அனுப்பியதன் பின்னர் யாமதனைப்பார்க்க இதுபோற்றெளிவாய தமிழ் நடையில் வடநூற்களை மொழிபெயர்க்கப் புலவரு முளரோவென வியப்புற்று இந்நூலை யனைவரும் பார்த்து அதன் பொருட்களை நன்காராய்ந்து வருவது நம தாத்திகமதத்தி னபிவிருத்திக்குக் காரணமாகு மெனவெண்ணி இம்முறை இப்பத்திரிகையின்கண் பிரசுரிக்கலாயினேம். நமது முன்னுசிரியர் பாடியங்கள்கூட பரிசிரமமின்றித் தெளிவா யதன்பொருட்களை யிவ்வண்ண முணர்த்துவதரிதே. அதுபற்றி ஐயமற்றுக் கற்றுக்கொள்ள விருப்புற்றவர்கட் கேனையோருரைகள் ஏலா. அதுபற்றி யவற்றைப் பற்றுவதும் சாதாரணர்க்கு வெறிதே. இப்புத்தகம் வேண்டுபவர்கள் கோயமுத்தூர் உ-வதுவகுப்பு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ குப்புசாமி ஐயரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்
கும்பகோணம், பட்டஸ்ரீ நாராயணசாஸ்திரிகள்,
பத்திராதிபப் பிரதிநிதி.

## அஷ்டாங்கயோகம்.

இந்நூல் மனமதனை யடக்கவும், அணிமாதிசித்திகளை முடிக்கவும், தத்துவஞானம் பெறவும் துணைக்கருவியாயபதஞ்சலிசூத்திரம் யாக்ஞியவல்கியம் முதலியவற்றிற் கூறிபிருப்பவற்றை யாராய்ந்து தெளிவாய் துரைசாமி முதலியாரவர்களாலியற்றப்பட்டுளது. இதில் நாடிசுத்தி, அஷ்டாங்கங்கள் முதலியவை நன்றாய்ப் புலவர்கள் புகழும்வண்ணம் எழுதப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகம் வேண்டியவர்கள்சென்னபட்டணம் பெத்துநாய்க்கன்பேட்டை பிடாரியார்கோயில் வீதியில் 3?-வது கதவிலக்கமுடைய வீட்டில், வே. துரைசாமிமுதலியாரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்-

இதன் விலை அணா-ரு. மொத்தமாய் வாங்குவோர்கட்கு க0-க்கு க-ம் உரு-க்கு ரு-மாக அதிகமாய்க் கொடுக்கப்படும்

## ஆச்சரிய தர்ப்பணம்.

இந்நூல் சுலபமாய் வேதாந்த சித்தாந்தங்களைக் கற்றுணரவிரும்புபவர்களுக்கென அதிக சங்கிரகமுமன்றி யதிகவிஸ்தாரமுமன்றி எழுதப்பட்டுளவோர் வேதாந்தநூல். இதின் கண் பற்பல வடநூற்களைக்கற்றுணர்ந்தறியக்கூடிய வரியபல விடயங்கள் தெளிவாய் சிரமமின்றித் தமிழ்ப்பாஷையில் இறமையுள்ளவர்களும் தெரிந்துகொள்ளலாம். ஆகையால் இது எல்லோருக்கும் பயனுள்ளது. இதின் விலை பிரதி-க க்கு- ரூபா 2 இது வேண்டியவர்கள் கோயமுத்தூர் ஜில்லா சங்கலெக்டராபீஸ் சிரஸ்த்தாரவர்கள் ம-ா-ா-ஸ்ரீ பொன்முடி வெங்கிடராமையரவர்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். மிகவும் பயனுளது.



சன்னிதோஷத்தினால் புத்தியினின்றும் பொருள் தோன்றுவதும் பித்தம பிடித்தவனுக்கு அவன் புத்தியினின்றும் பொருள்கள் தோன்றுவதும் இன்னுமிவ்வாறு பல பிரத்தியக்ஷ அனுபவங்களிலிருப்பதால் அவரது ஆக்ஷேபம்பயன்படாமையறிக. ஞானத்திலிருந்து சடங்காரியப்படாதென்பதனால் சடத்திலிருந்தே சடங்காரியப்படுமென்றிவர் பக்ஷம்போலும். இவர்பக்ஷத்தில்மாயை சடம்; அன்றிக்காரணமுமாகும். சடமும் காரணமுமான மாயையினின்றும உலகமுண்டாதல் இவர்க்குத் தோஷமில்லைப்போலும். அப்படியானால் திருஷ்டாந்தவாயிலாகப்பார்ப்போம். மண் சடம்; குடமும் சடம். மண் காரணம்; குடங் காரியம். மண்ணினின்றும் கடமுண்டாவதுபோல் மாயையினின்றும் உலகமுண்டாயிற்றென்பது இவர் பக்ஷம். மண்ணினிடத்துக்குடம தோற்றமேயன்றி யுண்மைப்பொருளன்று. சித்திலிருந்தேனும சடத்திலிருந்தேனுந்தோன்றும் பொருள்கள் யாவும் போலிப்பொருள்களாம்; உண்மையன்று. இதனால் ஞானமயமான பிரமமானது உலகாகக் காரியப்படுதல் யாங்ஙனமென்று கேட்ட கேள்வி பயனில் கேள்வியாயிற்றென்பதாம்.

இதன்மேல் உலகத்தைப் பொய்யென்று பௌத்தர் கொள்வதுபோல் வேதாந்திகளுங் கொள்ளுகின்றமையால் வேதாந்திகளைப் பௌத்தரென்று கூறி "இவ்வெல்லாப் பெயர்களும் நாஸ்திகத்திலேயே பரிவசானமாய்" என்கின்றார். ஒருவித வொப்புமைகொண்டு வேதாந்திகளைப் பௌத்தரென்றால் உலோகாயதரைப்போல் இச்சித்தாந்திகளும் உலகையுண்மையென்கின்றார்களாதலால் சைவசித்தாந்திகளும்உலோகாயதரென்னலாமே. அங்ஙனம் உலோகாயதராகுங்கால் இவர் நாத்திகராகாதொழிவரோ? இதன்மேல் 'யாம் மாயையெனக்கொண்ட பொருளையே யிவர் பிரமமெனக் கோடலால் இவர் மாயாவாதியான துண்மையறிக" என்கிறார். இதனால் இவரது புத்திகலங்கி மருண்டு இன்னது எழுதுகின்றோம், இன்னொருடைய சித்தாந்தமிது என்று தெரியாமலிருக்கிறதாய்த் தெரிகிறது; வேதாந்திகள் பிரமத்துக்கிலக்கணம சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம, பரிபூரணமென்றும், அதற்கெதிர்மறையாக மாயைக்கு அசத்து, ஜடம், துக்கம, அநித்தியம், கண்டம் என்றுங் கூறியிருப்பதை யறியாது அவ்வாறு பேசுகின்றமையானென்க. இவர், வேதாந்திகள், மாயையை யின்னவகையாகக் கொள்ளுகின்றார்களென்றறியாமையால் ஒன்றிருக்க வொன்று பேசி ஏமாந்துபோகின்றார். இவா மாயையைச் சடமென்றொப்புக்கொள்வதோடு ஓர்வித சத்தியாகவும் அங்கீகரிக்கின்றார். சத்தி குணமாதலின் சிவத்துடன் அபேதமாகவேண்டும். அப்போது மாயையினது சடகுணஞ் சிவத்துக்கேறும். அப்போது சிவஞ்சடமாகவேணடும். இவ்வளவு குற்றம் தமது மதத்தில் வைத்துக்கொண்டு இதர மதங்களில் தோஷங் கண்டுபிடிக்கவருகிறார். சிவத்தினிடத்திலுள்ள மாயைக்குச் சரியான அருத்தமிருக்க அதையுணராது வேதாந்திகள் மாயையைப் பொய்யென்கிறார்களென்றும், ஆதலால் வேதாந்திகள் மாயாவாதிகளென்றும் கூறுகின்றார். இவர் சொல்வதுபோல் வேதாந்திகள் மாயையைப் பொய்யென்பவர்கள்; இச்சைவசித்தாந்திகளோ மாயையை மெய்யென்கிறவர்கள். இப்படியானால் மாயையென்பதொன்று இல்லவேயில்லையென்பவர்கள் மாயாவாதிகளா? அது நான்குகாலத்திலும் சத்தாயுள்ளதென்கிறவர்கள் மாயாவாதிகளா? மாயையை யில்லையென்கிறவரோ மாயாவாதியா கிறபோது அதைப்பலமாயுண்டென்கிறவர் ஏன் மாயாவாதியாகமாட்டார்? இவர் சமபுத்தியுடன் பேசுகிறவரல்ல, இவர் தமதழுக்கைச் சலவைத்துப்படியால மூடிப்பிறர் குற்றத்தைப் பூதக்கண்ணுடியால் விரித்துக்காணபிப்பாரைப்போன்றார் போலும். இவர் சொல்வதுபோல் வேதாந்திகள் மாயையைப்பொய்யென்றுசொல்லுகிறார்களோ வென்னில் அவ்வாறு சொல்வது கிடையாது. அவர்கள் மாயையை மெய்க்கும் பொய்க்கும் விலட்சணமென்றும், அதோடு இன்னதன்மைத்தென வுரைக்கப்படாதென்று பொருள்கொள்ளும் அநிர் வசனீயமென்றுஞ் சொல்லுகிறார்கள். இவர் "எலுசெட்டிலக்க ஏகலக்க" என்கிபடி யெல்லாவற்றையுஞ்சேர்த்துப் பொயயென்கிறார்கள் என்கிறார். வேதாந்திகள் அவ்வாறு சொல்வதில்லை. பொய் நான்குவகைப்படும். வந்தியா புத்திரனும் பொய்தான்; ரச்சு சார்ப்பமும் பொய்தான்; கானற்சலமும் பொய்தான்; கனவுலகமும் பொய்தான்; இவ்வாறு பொய்யில் பலவிதபேதங்களிருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொன்றுபயோகமாகும். உலகம் பொய்யென்பது வரையில் வந்தியாபுத்திரன் திருட்டாந்தம்; பொய்யானால் தோன்றாமலிருக்கவேண்டுமென்னும்போது ரச்சு சர்ப்பதிருட்டாந்தம்; சர்ப்பம் பொய்யென்றறிந்தால் தோற்றுகின்றதில்லையே யென்றும் உலகம் காரியகாரணமுதலிய விசாரணையில் பொய்யென்றறிந்தாலும் தோற்றுகின்றதே யென்றும் வினு நிகழும்போது கானற்சல திருட்டாந்தம்; கானற்சலம் பொய்யென்றறிந்தபின்னரும் தோற்றிக்கொண்டிருந்தாலும் நீருந்துகிறதற்குதவவில்லையே யென்றும் கேள்வியுண்டாம்போது கனவுலக திருட்டாந்தமாம்; கனவுலகம் பொய்யென்று ஒருவிதத்தில் பூர்வபக்ஷமாய்ச்சொல்லப்படுகிறதே யன்றிச்சி

த்தாந்தமல்ல. பொய்யானல் வந்தியாபுத்திரன் போல் தோன்ருமலிருக்கவேண்டும். மெய்யானல் முக்காலத்துமிருக்கவேண்டும். பொய்மெய்யென்னலாமெனில் எதிர்மறையான இரு இலக்கணமுள்ள பொருள் இராது. ஆதலால் கனவுலகம் பொய்க்கும் மெய்க்கும் வேருன அநிர்வசனீயமென்றே சொல்லத்தகும். இந்த இலக்கணத்தையே மாயைக்குச்சொல்லுகின்ருர்கள் வேதாந்திகள்.

இனி மாயை இப்படிப்பட்டதெனவுவமான பூர்வமாய் வரைந்துகாட்டுவோம்.

கடத்துக்கு முதற்காரணம் மண்ணென்று சொல்லப்படுகின்றது. ஆயினும் மண் முதற்காரணமென்று முற்றுங்கூறப்படாது. மண் முதற்காரணமாயின் கடல்மண், ஆற்றுமண், தெருமண், களர்மண் முதலிய மண்ணினுல் கடஞ்செய்தல்வேண்டும். அவ்வாறு செய்ய இயலாமையால் மண்ணே முதற்காரணமென்று கூறல்பொருந்தாது. அம்மண்ணிலுள்ள சத்திவிசேஷமே கடத்திற்கு முதற்காரணமென்று கூறல்வேண்டும். அந்தச்சத்தி கண்ணுக்குப் புலப்படுவதன்று. அது உண்டென்பது அநுமானமே. அநுமானம் பிரத்தியக்ஷமின்றி நிகழாது. பிரத்தியக்ஷமான புகையில்லாவிடில் அப்பிரத்தியக்ஷமான நெருப்புண்டெனக்கோடல் எங்ஙனம்? இதனுல் அநுமானத்திற்குப் பிரத்தியக்ஷம் இன்றியமையாதென ஏற்படுகின்றது. அந்தப்பிரத்தியக்ஷம் சத்தாயிருத்தல் வேண்டுமா? அசத்தாயிருத்தல் வேண்டுமா? சத்தாகவேயிருத்தல்வேண்டும். அசத்து அல்லது சத்துப்போலியாயிருந்தால் அநுமானம் சித்தியாகாது. சத்தான புகைக்குப்பதில் அசத்து அல்லது சத்துப்போலியாகத் தோற்றும் பனி அல்லது மேகமாசு காணப்பட்டால் நெருப்புச் சித்திக்குமா? இதனுலென்ன தெரிகிறதென்னில் பிரத்தியக்ஷப்பொருளுண்மையாயிருந்தால்தான் அநுமானப்பொருள் சித்திக்குமென்ருகின்றது. இங்ஙனமே கடமென்னும் பொருளுண்மையாயிருந்தால்தான் கடசத்தியென்பதொன்றுண்டெனத் தீர்மானமாகும். இனிக் கடமென்னும் பொருள் சத்தா அல்லவாவென்பதைப்பற்றி விசாரிக்கின் அது மண்ணைத்தவிர முக்காலத்துமில்லாமையால் கடம் அசத்தாகும். அசத்தான கடத்தைக் கொண்டு சத்தியுண்டெனக்கொள்வது கூடாது. பிரத்தியக்ஷமான சத்தைக்கொண்டு அப்பிரத்தியக்ஷமான சத்தையறிவது அநுமானம். கடமோ பிரத்தியக்ஷம்; சத்தியோ அப்பிரத்தியக்ஷம். கடமோ அசத்து. இந்தப்பிரத்தியக்ஷமான அசத்தைக்கொண்டு சத்தியுளதெனலமையுமா? பிரத்தியக்ஷம் அசத்தானல். இதுகாரணமாகக் கொள்ளப்படும் அப்பிரத்தியக்ஷமும் அசத்தாய்ப்போகாதா? இதனுல் கடமும் அசத்து; அதுகாரணமாகக்கொள்ளப்படும் கடசத்தியும் அசத்து. இவ்வாறே யுவமேயத்தை நோக்குவோமாயின் உலகமும் அசத்து; அது காரணமாகக்கொள்ளப்படும் சத்தியாகிய மாயையும் அசத்து கடசத்தியும் கடமும் அசத்தாய்ப்போனலும் மண்ணென்று முக்காலத்துமுள்ள சத்தாம்; அவ்வாறே மாயாசத்தியும் உலகமும் அசத்தாய்ப்போனலும் பிரமமொன்று முக்காலத்துமுள்ள சத்தாம். இனி அசத்து இப்படிப்பட்டதென ஆராயின் அது வந்தியாபுத்திரனும் அசத்து; ரச்சு சர்ப்பமும் அசத்து; கானற்சலமும் அசத்து; சொப்னவுலகமும் அசத்து. யாவும் அசத்தாயினும் மாயை சொப்பன வுலகம்போன்ற அசத்தாம். மற்ற வுவமானமெல்லாம் பூர்வபக்ஷம். மாயை முற்றுமில்லையென்றுரைத்தல் கூடாது. இருப்பதாயக் காணப்பட்டு விவகாரத்துக்கும் அநுபவத்துக்கும் இயைந்திருப்பதாகிப் பொய்யாய்ப்போதலால். அதுபற்றியே சொப்பனவுலக திருட்டாந்தஞ் சொல்லப்படுகின்றது. சொப்பனவுலகம் முற்றும் மெய்யென்றுரைக்கப்படாமையாலும் முற்றும் பொய்யெனறுமுரைக்கப்படாமையாலும். மெய் பொய்யென்று சேர்த்துச்சொல்லலாமெனில் நேர்விரோதமான இரண்டு தருமம் ஒருபொருளினிடத்திராமையாலும் மாயையென்பது மெய் பொய் இரண்டுக்கும் வேருனதென்றும் இன்னதன்மைத்தென்று கூணிக்கப்படாதென்று பொருள்கொள்ளும அநிர்வசனீயமென்றும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு மாயைக்குஇலக்கணம் சதசத்விலக்ஷணம் என்றும் அநிர்வசனீயமென்றும் வேதாந்த நூல்கள் கோஷித்தும் பிரசங்கித்தும் அனேக பத்திரிகைகளிலெழுதியும் இந்தச்சோமசுந்தரநாயகரென்பார் அவைகளையெல்லாங் கவனியாமல் "தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்பதற்கிணங்கத் தாம் பிடித்த முரட்டுப்பிடியைவிடாமல் வேதாந்திகள் மாயையைப் பொய்யென்கிருர்களென்றும் உலகைப் பொய்யென்கிருர்களென்றும் எல்லாம்பொய்யென்கிருர்களென்றும் சொல்லுவதுடன் வாயில்வந்தபடி திட்டியும் அவ்வாறு எழுதியும் வருகின்ருர்.

சித்தாந்த சாஸ்திரங்களுமிதற்கு மாருகச்சொல்லவில்லையென்பதைத் தெரிவிக்கின்ருேம். வேதாந்தநூல்கள் சொல்லுகிற பிரமஸ்தானத்தில் சிவத்தையும், மாயைஸ்தானத்தில் மாயையும், உலகஸ்தானத்தில் உலகத்தையும் வைத்துப்பேசுகின்றன சித்தாந்தநூல்கள், வேதாந்தநூல்கள்மாயையைப்பின்னுசத்தியென்கின்றன. சித்தாந்த



நூல்களும்மாயையைப்பின்னுசத்தியென்றும்பரிக்கிரகசத்தியென்றுங் கூறுகின்றன. பின்னுசத்தியென்ருலும் பரிக்கிரகசத்தியென்ருலும் ஒன்றுதான். வேதாந்திகள், பிரமத்திற்கு மாயையோர்வித சத்தியாதலால் சத்தியைச்சத்தனுன பிரமத்தினிடத்தில் அடக்கி ஒருபொருளாக்கி, உலகத்திற்குப் பிரமம் முதற்காரணமென்றுசொல்லுகிருர்கள். சித்தாந்திகளோ சிவத்தையும் மாயையும் வேறுபிரித்து உலகத்துக்கு மாயையே முதற்காரணமெனறு சொல்லுகிருர்கள். வேதாந்திகள்பிரமத்தையும் மாயையும் பிரித்து மாயையை முதற்காரணமென்றுஞ்சொல்லுவதுண்டு. சொன்னலும் அது பூர்வபக்ஷந்தான். சித்தாந்தம் பிரமமே முதற்காரணமென்பதுதான். சித்தாந்திகள் எக்காலத்தும் சிவம் முதற்காரணமென்று சொல்வதில்லை. இந்த இரண்டு சித்தாந்தங்களும் சொற்களில் பேதமேயன்றிப்பொருளிலில்லை. கடத்துக்கு முதற்காரணம் மண்ணென்பவர் போல வேதாந்திகள். கடத்துக்குமுதற்காரணம் கடசத்தியென்பவர் போலச் சித்தாந்திகள். ஆனுலும் மாயையொருபொருளல்ல. பொருளென்று சொல்வோமாயின் சிவம் ஒருபொருளும் மாயையொருபொருளுமாகி இரண்டுக்கும் பின்னத்துவமுண்டாய்க் கண்டபொருளாய்விடும். ஆதலால்அது பொருந்தாது. சிவத்தினிடத்தில் அவாந்தரமாயுள்ள ஓர்விதசத்தியென்றே சொல்லவேண்டும். இவ்விதமான சத்தியொன்றிருப்பதில் சிவத்துக்கு யாதொரு பாதகமில்லை. சொப்பன வுலகத்திற்கு முதற்காரணம் மனம். அம்மனத்தினின்றே சொப்பனவுலகமுண்டாயது. மனம் காரணம்; சொப்பனவுலகங் காரியம். காரியம் உண்டாதற்குமுன் காரியம் காரணத்தில் சத்திருபமாயிருந்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட சத்தியில்லாவிடில் காரியந்தோன்றுதற்கிடமில்லை. மண்ணினிடத்துக் கடசத்தியில்லையாயின் கடந்தோன்ருது. பழுதையின்கண் பாம்புபோல் தோற்றுஞ் சத்தியொன்றிருந்தமையானே பாம்புதோன்றுதற்கிடமுயிற்று. எந்தப்பொருளின்கண் எந்தச்சத்திகளிருக்கின்றனவோ அவைதான் தோன்றும். அவ்வாறே மனத்தினிடத்துச் சொப்பன வுலகந்தோன்றுதற் கேதுவான சத்தியொன்றிருக்கிறது. அந்தச்சத்தி அவாந்தரமா யிருக்கிறது. அது இருப்பதால் மனத்திற்கு யாதொரு பாதகமுமில்லை. அந்தச்சத்தி பின்னுசத்தியாகும். பின்னுசத்தியாயினமையின் அதனுலுண்டான சொப்பனவுலகத்தில் பல ஜீவர்கள்படும் சுகதுக்கங்கள்மனத்தைத்தாக்கவில்லை. எது பின்னுசத்தி அல்லது பரிக்கிரகசத்தியினது காரியமோ அதற்குவரும் நயநஷ்டங்கள் காரணத்தையணுகா. அவ்வாறே சிவத்தினிடத்துள்ள பின்னுசத்தியான பரிக்கிரகசத்தியின் காரியமான வுலகால் அதாவது ஜீவர்களால் வரும் நயநஷ்டங்கள் சிவத்தையணுகா. அவ்வாறே இவ்வுலகில் ஜீவர்கள் படும் சுகதுக்கங்கள் சிவத்தைச் சாருவதில்லை. சொப்பனவுலகில் பல ஜீவர்களனுபவிக்கும் நயநஷ்டங்கள் ஏன் மனத்தைச் சாருவதில்லை யென்னில் சொப்பனவுலகம் பரிக்கிரகசத்தியின் காரியமாதலால் வேருகவேயிருக்கின்றது. வேருயிருக்கிறபடியால் அதனுல்வரும் நயநஷ்டங்கள் காரணத்தைச் சாருவதில்லை. அப்படியே சிவத்தினிடத்துள்ள பரிக்கிரகசத்தியின் காரியமான இவ்வுலகு சிவத்திற்கு வேருயிருக்கிறபடியால் இவ்வுலகிலுள்ள ஜீவர்கள்படும் சுகதுக்கங்கள் சிவத்தைச்சாரா. சிவமில்லாவிடத்தி லிவ்வுலகமிருந்தாலல்லவா உலகத்தின் நயநஷ்டங்கள் சிவத்தைச்சாராம லிருக்கலாமென்று சங்கைபண்ணக்கூடும். அது உண்மைதான். சிவத்தைப்போல் இவ்வுலகம் சத்தாயிருந்தால் அந்த ஆக்ஷேபம் மனஞ்செய்யும். இவ்வுலகம் தோற்றல்மாத்திரமா யிருப்பதால் ஆக்ஷேபமாகாது. கயிற்றிற் பாம்புதோன்றுவதால் கயிற்றுக்கு என்ன நஷ்டம். காரணத்துக்கும் காரியத்துக்கும் அபேதமே. காரணத்தைத்தவிர காரியம் ஒரு அணுக்கூடப்பிரிந்திராது. மனத்தினிடத்துச் சந்திரத்தியானமுண்டாமாயின் சந்திரன் ஆகாயத்திலிருப்பதாய்ப் புலப்படுகிறது. தியானிப்பவன் பூமியிலும் தியானப்பொருளான சந்திரன் ஆகாயத்திலு மிருப்பதாய்த்தோன்றினுலும் உண்மையில் சந்திரன் மனத்திலேயே யிருக்கிருன். சந்திரன் பேதமாய்த் தோற்றினும் உண்மையில் அபேதமேயாம். அவ்வாறே சொப்பன வுலகம் மனத்துக்குப் பேதமாய்த தோற்றினும் அவ்வுலகிலுள்ள பல ஜீவர்களுடைய லாபநஷ்டங்கள் மனத்திற்குச் சம்பந்தமில்லாதிருப்பினும் அபேதமேயாம். அங்ஙனமே சிவத்துக்கு இவ்வுலகம் பேதமாய்த்தோற்றினும் ஜீவர்களுடைய லாபநஷ்டங்கள் சிவத்தைச்சாராதிருப்பினும் சிவத்துக்கு இவ்வுலகம் அபேதமே. இவ்வித ஆக்ஷேபத்துக்கெல்லாம் சமாதானஞ்சொல்வதற்குக் காரணம் உலகத்தைச் சத்துப்பொருளா யொப்பாமையே. சத்தாய்ச்சொல்வோமானல் ஆக்ஷேபங்கள் ஆக்ஷேபங்கள்தான். இனி மாயையினிடத்து உலகமுண்டாவதைப்பற்றி ஆலோசிப்பாம். மாயை யொருபொருளல்லவென்று முன்னரே கூறியுள்ளேம். சித்தாந்திகள் சொல்லுகிறபடி யொருமுதலாக வைத்துப்பார்த்தாலும் உலகம் தோற்றமேயன்றிப் பொருளல்ல. ஒருபொருளினிடத்து மற்றொருபொருள் உண்டாமென்று சொல்வது பிரயோசன மற்றதாயிருக்கிறது. மண்ணிடத்துக் கடமென்னும் பொருளுண்டாயிற்றென்று விவகாரமாய்ச் சொல்லினும் உண்மையில் ஒருபொருளிடத்து வேறொரு பொரு

ண்டாதலில்லவேயில்லே. காரணத்தின் மாறுதலேயான குணத்தையே காரியப்பொருளென்று சொல்லிக்கொள்ளுகின்றார்கள். மண்ணினிடத்துண்டான சில மாறுதலேயே கடமென்று சொல்லுகிறார்கள். மண்ணின் மாறுதலேயன்றிக் கடமென்னும் மொழிக்குப்பொருளில்லே. மாயையினிடத்திலிருந்து உலகமுண்டாயிற்றெனின் மாயை பால் தயிர்போல் தன்வடிவங்கெட்டு உலகாயிற்ரு? தன்வடிவங் கெடாது ஆயிற்ரு? இக்கேள்விக்குக் கெட்டு ஆயிற்றெனின் பின்பு மாயையே யில்லேயென்று சொல்ல நேரிடும். மண்கடம்போல் கெடாமல் ஆயிற்றெனின் மண்ணேத்தவிரக் கடத்துக்குப்பொருளில்லே யாகலின் மாயைத்தவிர வுலகிற்குப் பொருளில்லேயென்று சொல்லவரும். ரச்சு சர்ப்பம்போலென்னின் சர்ப்பம் பொய்யாம். வேதாந்தப்படிபார்த்தாலும் சித்தாந்தப்படிபார்த்தாலும் யுக்தி அநுபவங்களாகப் பார்த்தாலும் உலகம் பூர்வபக்ஷமாக அசத்தும் சித்தாந்தமாக அநிர்வசனியமுமாம்.

(இன்னும்வரும்)
ஓர் இந்து.

## அத்துவிதவிசாரம்.

தொடர்பு.

இனிப்பொருட்பொருத்தவின்மையைப்பற்றிவிசாரிப்பாம். இவர் கூறும்பொருள் அன்மை. அது அழிவுபாட்டபாவமே. சிலவிடம் வேற்றுமை எனப்படும் ஒன்றின் ஒன்றபாவத்திலும் அன்மைச்சொற்குபயோகமுண்டு. உதாரணமாக 'தொடர்பற்றது' 'கடமல்லாதது' என்னுமிடங்களில் முறையே அழிவுபாட்டபாவம் ஒன்றினென்றபாவங்களேக் குறிக்கின்றது காண்க. அற்றேல் 'அப்ராஹ்மண:' 'அப்பிராம்மணன்' என்றற்றொடக்கத்தனவான சொற்களும் வேற்றுமையடங்கியஒப்புப்பொருளேக்கொண்டு முடிவுபெறுதலின் அங்குதோன்றும் நகரப்பொருளாய வன்மையே ஈண்டும்பொருளாகக் கோடலாகாதோவெனின், ஆகாது; வேற்றுமையை மற்றொன்றிலடக்காது தனிப்பொருளாயும் ஒப்பைத் தனிப்பொருளாயும் 'ததந்யத்வம்' 'ஸாத்ருஶ்யம்' 'ததன்யத்துவம்' 'ஸாதிருசியம்' என வேறுபிரித்து நகரப்பொருளாக ஆசிரியர் கூறியதால் என்க. இனி வேற்றுமைப்பொருளடங்காத ஒப்பின்மையின் 'ததந்யத்வம்' 'ததன்யத்துவம்' என வேறு கூறிய வேற்றுமையும் இதினடங்கிய பொருளே விரித்துக்கூறியதேயெனின், அதுவும் பொருந்தாது. ஒப்பென்பது வேற்றுமை தம்முளடக்கியது 'பேதகடிதம்' 'பேதகடிதம்' என்றும், வேற்றுமை தம்முளடக்காதது 'பேதாகடிதம்' 'பேதாகடிதம்' என்றும். இவற்றுள் பேதகடிதம் என்பதேநகரப்பொருளென 'நஞ்' என்னுஞ்சூத்திர வியாக்கியானத்திற்றானே 'நஞிவயுக்தம் அந்யஸத்ருஶாதிகரணே' என்று ஆசிரியர் பதஞ்சலியார் கூறுதலாலும் 'அநாகாஶ:' 'அனுகாசம்' முதலிய சொற்களில் வேற்றுமை தனித்து ஒப்பின்றிப்பொருளாதலாலும் வேற்றுமையை ஒப்புமையில் அடக்காதெடுத்துவிடுத்தார் என்க. மேலும் வேற்றுமை தனிப்பொருள். அதைத் தம்முருவத்தடக்கிய ஸாதிருசியம் விசிஷ்டப்பொருள். ஆகவே ஓரோ 'ந' என்பது 'ஶுக்லம்' 'சுக்லம்' முதலிய சொற்களேப்போலச் சுத்தத்தையும் விசிட்டத்தையும் கூறிநிற்கும் என்பது ஆசிரியர் உட்கருத்து. அற்றேலஃதங்ஙனமாக 'விஶிஷ்டம் ஶுத்தாந்நாதிரிச்யதே' 'விசிஷ்டம் சுத்தத்திலும் வேறுபடாது' என்றும், 'அதிகாவாப்யவிஶிஷ்டம் ந நஶ்யதி' 'அதிகம் அடைசேருவதால் அது கெடுவதில்லே' என்றும் தருக்கநூல்முதலிய விடயலாற் சாதிப்பதால் விசிட்டப்பொருளாய ஸாதிருசியமே போதாதோவெனின், இது பொருளியலறியாப்புறமொழியேயாம். என்னையெனில், கூறுதும்: விசிட்டம்-வியாப்பியம். சுத்தம்-வியாபகம். உதாரணம்: 'படவிஶிஷ்டகட:' ஆடையுடன் சேர்ந்த குடம்' விசிட்டம். தனித்த குடம் சுத்தம். ஆடையுடன் சேர்ந்ததும் குடமேயாதலினும், ஆடைச் சேர்க்கையில்லாவிடத்தும் குடம் இருத்தலினும் என்க. வியாப்பிய வியாபகபாவங்கொண்ட விசிட்ட சுத்தங்களே ஒன்றுபடுத்தியது விசேடியத்தை நோக்கியே என்பது அன்னோர் கொள்கை. இதனுல் பண்டிதர் சிலர் விசிட்டாத்துவிதம் சுத்தாத்துவிதம் என்னும் இருசொற்களும் தருக்கநூலார் வழங்கும் 'விசிஷ்டசத்தை' 'சுத்தசத்தை' என்னுஞ்சொற்களேப்போல் ஒன்றுக்கொன்று எதிர்மறைப்பொருளே உணர்த்தும் சொல்லெனப் புகன்றதும் 'விசிட்டம் என்னுஞ் சொல்லடையுற்ற நிலேயையும் சுத்தம் எனுஞ்சொல் அஃதற்ற நிலேயையும் கூறுவதால்' என ஏதுவுரைத்ததும் மேற்காட்டிப்போந்தவிசிட்டசுத்தவேறுபாடின்மை வாதத்துணிபுரையானவிசிட்டசுத்தவியாப்பிய வியாபகபாவ சித்தாந்தத்தாற் சிதைந்ததறிக. மேல் அவர் கூறியவாறேற்பின் விசிஷ்டசத்தை சுத்தசத்தை என இருசொற்றொகுதிகளிலும் அடங்கிநிற்கும் சத்தையெனுஞ் சொல் ஓரோ பொருள்கொண்டு முடியும் சொல்லாதலின் அதில் ஓர் அடைசேர்த்திடவிசிட்டமும் இல்லாவிடமும்சுத்தமும் ஆவதுபோல் விசிஷ்டாத்துவித சுத்தாத்துவிதச் சொற்களில் அடங்கிய 'அத்துவிதம்' என்னும் விசேடியச்சொற்குப்பொருள் ஒன்றுதல்வேண்டும். ஈண்டு விசிட்டம் துவிதவின்மையும் சுத்தம் துவிதவன்மையுமாதலின்அடைசேர்ந்தவத்துவிதவின் மைக்கு வியாபகமும் சுத்தாவஸ்தையும் துவிதவின்மையாகுமேயன்றித் துவிதவன்மையாகாது. இனி விசிஷ்டாத்துவிதம் என வொன்றிருக்கச் சுத்தாத்துவிதந்தான் ஏது எனில் கேவலாத்துவிதமே எனக்கூசாதுரைக்கத் தடையாது? கேவலம், தனித்தது, விசேடணமில்லாதது என்பன ஒருபொருட் சொற்கள். இனிப் பொருள்வேறுபடினும் சொல்லொன்றுதல் பற்றி அங்ஙனங்கூறினும் எனில், நன்று!நன்று!! விசிட்டசுத்தாவத்தைகள் சொல்லினிடமா,பொருளினிடமாவமைந்தன? இவ்வேற்றுமையைச் சற்றுமறியாதார் நுண்ணறிவாளர் செய்யும் இப்பெரும் சொற்போரிலெதிர்ப்படுவது அறிஞர்அபஹாஸத்துக்கிடமாம். மற்றுத் தார்க்கிகர் சத்தை என்னுஞ் சொற்



குச் 'சாமான்னியம்' எனும் ஒருதன்மைப்பொருள் என்பர். வேதாந்திகள் பிரமமே உண்மைப்பொருளாதல்பற்றி அதைச் 'சத்தை' என்பர். பொருள் வேறு; சொல்லொன்று. ஆயின் விசிட்டசத்தை சுத்தசத்தை என்னும் நியாயநூல் வழக்கில் ஒன்று வைசேடிகசத்தை ஒன்று வேதாந்தி சத்தை என்பது ஒவ்வுமேல் மேற்கூறிய பண்டிதர் வாக்கியமும் மணம்பெறும். ஆயின் அன்மைப்பொருள் நகரத்துக்குரைத்திடின் அது ஒருபொழுதும் விசிட்டச்சொல்லுக்கு எதிர்ச்சொல்லாகாது. இது மட்டோ! இப்பண்டிதர்கொண்ட திருட்டாந்தம் ஒவ்வாமை மற்றொருவழியிலுங் காட்டுவோம். விசிட்டம் அடைசேர்ந்தது, சுத்தம் அஃதில்லாதது என்பதே இவர் கருத்து. ஆயின் நிர்விசேஷம் சுத்தப்பொருளாயிற்று. அங்ஙனமமையச் சுத்தாத்துவித கேவலாத்துவிதங்கள் ஒருபொருள்கொண்டு முடியுஞ் சொற்களாயின. கேவலம், சுத்தம், நிர்விசேஷம் என்னுஞ் சொற்கள் ஒருபொருள்கொண்டு முடியும் சொற்களே. ஆயின் சுத்தாத்துவித கேவலாத்துவிதங்களுக்கு வேற்றுமை ஏதுமில்லேயென ஏற்படும். அது இப்பண்டிதர்க்கு அசம்மதமேயன்றோ? அற்றேல் நீவிர் சுத்தம் என்னுஞ் சொல்லுக்கு ரைக்கும்பொருள் இதுதானே. அங்ஙனமாயின் உமக்குத்தான் வேற்றுமை எங்ஙனம் அமையும் எனில், யாம் சுத்தமான வத்துவிதம் எனப் பண்பு பண்பிகளே உணர்த்தும் சொல்லாக வியாக்கியானஞ்செய்யாது 'சுத்தர்களின் அத்துவிதம்' எனப் பொருள்படுத்தி அதுமட்டில் கேவலாத்துவிதிகளினும் இவர் வேறுபட்டவரெனக் காட்டி அன்மைப்பொருளே மட்டில் நகரத்தின்கண்ணுக்ஷேபித்தாம். ஆயின் பண்டிதர் பக்ஷத்தில் வேற்றுமைத்தொகைவகையால் தொக்கியது முதல்வேற்றுமை. எமது பக்ஷத்திற் தொக்கியது ஆறும்வேற்றுமை. ஆகவே விசிட்டாத்துவித சுத்தாத்துவிதச்சொற்கள் ஜீவபரன்களது விசேடண விசேடணவின்மைகளுடன்கூடிய வவத்தையின்கண்ணமைந்த வத்துவிதத்தைக் கூறுமாதலின், இன்மைப்பொருள்கொண்டு முடியும் அத்துவிதச்சொல் கூட்டுறவாற் பிறந்ததென்பதே நல்வழி. ஆயின் பண்டிதர் கூறிய திருட்டாந்தம் விஷமமாயும் அசாதகமாயும் முடிந்தது. இனி விஷயத்தைப்பற்றிச்செல்வாம்.

முற்கூறியவாறு பொருள்களில் எப்பொருள் கொள்ளின் இவ்விடம் பொருந்துமென்பதை விசாரிக்கவெழுந்தோமாகலின், அங்குள்ள வின்மைப்பொருள் ஒன்றைத் தவிர மற்றைய பொருள்கள் பொருந்தாவழி முறையே உதாரணங்களுடன் காட்டுவோம்.

முதலில் ஸாதிருசியம்-ஒப்புமை, ஒவ்வுமா? என்பதைவிசாரிப்பாம். ஒப்புமை என்பது வியாகரணநூலார், அலங்கார சாஸ்திரிகள், வேதாந்திகள், மீமாஞ்சகர் முதலிய பல சித்தாந்திகள் கொண்டவழி தார்க்கிகர் குறித்த பொருள் ஏழனுள் அடங்காத தனிப்பொருள். தார்க்கிகர் கண்டபடி அது ஏழனுள் அடங்கிய ஓர் தன்மை. தார்க்கிகர் ஒப்புமையிலக்கணங் கூறுவது "அதனிலும் வேறாய் அதன்கண்ணமைந்த பல தன்மைபெற்று நிற்றல்" என்பது. மற்றவரிலக்கணம் 'அதுவோ என மயக்கம் பயக்கும் தன்மையுளது' என்பது. இவற்றுள் தார்க்கிகர்கூறிய விலக்கணவழியில் அடங்கியது வேற்றுமையேயன்றி அன்மையல்ல. முற்கூறிப்போந்த பண்டிதர் கொள்கையின்படி அன்மை தனிப்பொருளாகாது ஒப்புமையில் அடங்கியல்லவோ நிற்கவேண்டும். இனித் தன்வாக்கியம் பொருந்தவேண்டி ஒப்புமைக்கு அன்மையடங்கிய விலக்கணமொன்றுசொல்லி அதை எவரும் இதுவரையில் ஒப்பாமையால் அது தன் சித்தாந்தமெனவுங்கொண்டு தன் சித்தாந்தத்தையே எல்லோரும் ஒப்பும்படி ஆணையிடவும் வேண்டிவரும். மிக அழகு! இனி ஞானமிர்தத்தார் இவ்வன்மைப் பொருள் கொண்டு முடிந்த திருஷ்டாந்தமாக "அப்பிரமாணம்" என்னுஞ்சொல்லே எடுத்துக்காட்டினர். இது பொருந்துமாறெங்ஙனம். 'அப்பிரமாணம்' என்னுமிடத்தில் வேற்றுமைப் பொருள்கொண்டு பிரமாணத்திலும் வேறு என்று 'அனுகாசம்' முதலிய சொற்களேப்போலாவது, எதிர்மறைப்பொருள்கொண்டு பிரமாணவெதிர்மறையென அபுண்ணியம் முதலிய சொற்களேப்போலாவது பொருள்படுத்தக் கூடுமாதலால் என்க. நிற்க. இவர் ஒப்பியவாறு அன்மைப்பொருள் ஒப்புமையில் அடங்கி அதனிலும் வேறுபடாத பொருளாயிற்றே. அங்ஙனமாக, அப்பிரமாணம் என்னுஞ்சொல்லில் அகரம் அன்மையைத் தனித்துக்குறித்தது எக்காரணத்தாலோ? அவ்விதம் அன்மையே பொருளாகுமிடம் இஃதென இவர்காட்டிய உதாரணத்தில் ஒப்புமையிலடங்காது அன்மைதனிப்பொருளாகத் தோன்றியதுதான் எதுபற்றியோ? இனிச் சொற்சுருக்கமாய் பதஞ்சலியார் இருவகைத் தனிப்பொருள்களே ஒன்றாகக் கூறினர் என்பரோல் அவர் கொள்கையை மறுக்க ஆசிரியர் 'நஞர்த்தா: ஷட் ப்ரகீர்த்திதா:' 'நஞ்ஞின் அர்த்தங்கள் ஆறு' என எண்ணல் எடுத்து வகுத்தமை கண்டொழிக. முன் அப்பிரமாணம் என்னுமிடம் ஒப்புமையிலடங்காத வன்மைப் பொருள் எனவும், பிறகு நகரப்பொருள் ஆறனுள் ஒப்புமையிலடங்கியது அன்மை. அவ்வொப்புமை அவ்வன்மையை அடக்கியே நிற்கும் என்றும் இஞ்ஞானமிர்தத்தார் எழுதியது முன்பின் முரண்பட்டும் உதாரணமற்றும் ஒழிந்தது. நிற்க. அவ்வன்மையும் ஈண்டு அத்துவிதச் சொல்லின்கண்ணமைந்த அன்மையும் ஒன்றேவென வாராயினும் அஃதுமில்லே. அத்துவிதம் என்னுடத்தில் இவர்கூறும் அன்மை அழிவுபாட்டபாவம். அப்பிரமாணம் என்னுமிடத்துள்ளது ஒன்றில் ஒன்றனபாவம் எனும் வேற்றுமை. ஆகவே திருஷ்டாந்த தார்ஷ்டாந்த விரோதம் தெற்றெனப்புலப்படும். ஆகவே அதுவும் பொருந்தாது. இனி ஒப்புமை எவ்வழியிலாவது அத்துவிதச் சொல்லினகரப்பொருளாமோ எனின்? ஆகாதெனக்காட்டுவாம்: அத்துவிதம் என்னுஞ்சொல்லில் அமைந்த துவிதம் என்னுஞ்சொற்பொருள் எண்; அது இரண்டின்தன்மையைத் தான் குறிப்பதாயினும் 'விசிட்டச்சொன்மேலமையுந்தன்மைச்சொல் விசேடணத்தையே குறிக்கும்' என்பது பிரமாணநூற்றுணிபாதலின் ஈண்டு எண்ணுடையபொருளின்கண்ணமைந்த தன்மை எண்ணுகவே யிருத்தல்வேண்டும். உதாரணம்: 'தண்டித்துவம்' இங்கு தண்டம் விசேடணம்; அதையுடைய

வன். தண்டி விசிஷ்டன். அவன்தன்மையைக் குறிப்பது
த்வம் எனும் விகுதி. இங்கு இத்தண்டித்துவம் தண்டுள்ள
காலம் தோன்றுவதும் இல்லாவிடம் தோன்றுதொழிவதும்
பற்றித் தண்டித்துவம் என்பது தண்டே. ஆகையால் துவித
ம் என்பது இரண்டு எனும் எண்ணுக்கிடமாகத்தோன்றும் விசி
ட்டப்பொருட்டன்மையைக் குறித்தலின் அது விசேடணப்
பொருட்டாய் முடியவேண்டி எண்ணையே குறிக்கின்றது.
ஆயின் இரண்டெனும்எண்ணுடன் ஒப்புமை அத்துவிதச்சொ
ற்பொருளாகும். ஆகவே முக்தியிலுள்ள வத்துவித்தாவத்தை
எச்சித்தாந்தியும் ஒப்பாத வெண்ணொப்புமையாய் முடியும்.
ஆதலின் அது மிகவும் பொருந்தாமையறிக. இனி எண்ணின்
கண்ணமைந்த சொற்களுக்கு அவ்வெண்ணுடைய பொருளு
ம் பொருளேயாதலின் அதன் ஒப்புமையே அத்துவிதச் சொ
ற்பொருள் எனில், அதுவும் பொருந்தாது. அவ்வித ஒப்புமை
என்றுமுளதாதலானும் அது முக்தியிற்றான் உண்டெனக்
கூடாமையானும் என்க. மேலும் இங்குள்ள துவிதச்சொல்
எண்ணைக்குறிக்கும் சொல்லேயென ஷை ஞானமிர்தத்தார்
ஒப்பியே "எண்ணுப்பெயர் மேல் வந்த நகாரம் அன்மைப்
பொருண் மாத்திரையே யுணர்த்திப் பொதுமையினிற்பதன்
றி, ஏனைய சொற்களின்மேல் வந்த நகாரம்போலஇன்மைமறு
தலைப்பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கணின்மையின்,,
என்றார். அற்றேல், எண்ணுப்பொருள்மேல் நகாரமே இதுவா
தலின் அவர் கூறியபடி யன்மைப் பொருள்கொள்ளத் தடை
யாதெனின், அற்றன்று. யாம் முற்கூறியபடி எண்ணின் ஒப்
புமை 'பொருளாயின் பயனில்லாமையானும் அன்மை தனிப்
பொருளாக நகரப்பொருளாயின் எண்ணென்னும் பண்பின்
அன்மைமட்டில் (அன்மைப்பொருண்மாத்திரையேஎனஎச்சத்
தால் வற்புறுத்தியமையால்) பொருளாகுமாகலின் பண்பு
அற்றுப்போதல் பண்பியறுவிடம் கூடாமையினும் எண்ணொ
ழிதலே முத்தியாய் முடியச் சித்தாந்தவிரோதம் வருமாதலா
னும் 'ஏகஞ்கி' என்னும் மூலவாக்கியமும் 'வெணகூ)ௗமதஃ'
என்னும் பரமமூலவாக்கியமும் விரோதிக்குமாதலாலும் பிறகு
இவரோ எடுத்து விரிக்கும்வழி 'தத்ஸாதிருசியம் என்னும் ஒப்
பின்பாற்படும் என்க' என்பதால் ஒப்பின்றியன்மையமையா
விடம் இரண்டற்று இரண்டன் ஒப்புமை முத்தியென முடித்
தல்வேண்டுமாயின், சிவ சீவர்களுக்கு முத்தியில் சர்வசாமியங்
கூறுஞ் சிவசமவாதச்சைவராய் இவர்முடிவதாலும் இவர்காட்
டும் வேதாந்த சித்தாந்த மகாவாக்கியங்களும் அங்ஙனமே ஓதி
நிற்றலாலும், இங்கு எண்ணைக்குறிக்கும் சொல் ஆகுபெய
ராய்ப் பண்பியிடம் நிற்கவேண்டுவதுமோர்புறம் இவர் கூறும்
சிவசீவசாம்யவாதச்சாயைக்கு இன்றியமையாமையின் எண்
ணுப்பெயர் என இதைக்குறித்ததும் கௌணமேயாதலினும்
இவர் வழக்கின்மையின் என்றது வடமொழியில் அன்மைப்
பொருளில் நகரப்பிரயோகம் எங்குமின்மையானும் எண்ணுப்
பெயர்மேல் நகரம் எனக்குறித்தலால் நகரத்துடன்சேர்ந்த
சொற்றொகுதி வடமொழிச் சம்பந்தமற்ற தென்மொழியில்
இன்மையானும் இது வேறு எந்தப்பாஷை வழக்கோ என
ஒதுக்கிட வேண்டுமாதலானும் பொருந்தாமையின் என்க.

இதனல் 'வடமொழியில் மற்றைப்பொருட்கு இலக்கணம்
அமையாதென்றப்பத்திராதிபர் கூறியது பொருந்தாமையறி
க' என்று நமது ஞானமிர்தத்தார் எழுதியது பயனில்சொல்
லானதறிக. இனித் தென்மொழி வழக்கைக்கொண்டேதே
னும் நிரூபிப்போம் என இவர் வெளிவரினும் இவரோ 'அத்து
விதம் என்னுஞ்சொல் வேதங்களில் உள்ளது' என்பராதலின்
வேதத்தைப் பொருட்படுத்துமிடம் இவர் தென்மொழி வழக்
கை உபயோகிக்கக்கூடாது என்பதையும் பேரகத்தியம் முத
லிய நூல்கள் வேதாகமங்களுக்கு இலக்கணங் கூறவந்ததும
ல்ல; அவை தென்மொழி முதனூல்களுமல்லவென்பதையும்
சொல்லிக்காட்டுவோம். ஆயின் நகரப்பொருளான ஒப்புமை
யில் அழிவுபாட்டடாவமெனத்தார்க்கிசர் துணிந்தவன்மையை
யடக்கியதூஉம்,விசிஷ்டசத்தை சுத்தசத்தை என்னும் நியாய
நூல் வழக்கின் திருஷ்டாந்தம் விசிஷ்டாத்துவிதம் சுத்தாத்து
விதங்களுக்குனாத்ததூஉம், நகரத்துக்கன்மைப்பொருள் கொ
ண்டதூஉம் வடமொழி வழக்கறியார் உரையே.

இனி ஒப்புமை ஒவ்வாவிடினும் வேற்றுமை என்னும்
தஉநூக்வம் பொருள் இங்கொவ்வாதேயெனின், ஒவ்வாமை
காட்டுவோம். இரண்டெனும் எண் என்றும் அநித்தியமும்
'அபேக்ஷாபுத்தி விசேஷம்' என நையாயிகர் வழங்கும் ஓர்வ
கை அறிவாலமையும் பொருளாயும் நியாயநூலார்கூறுவதால்
இரண்டின்வேற்றுமை ஒன்றிலும் மூன்றுமுதலிய பலவேறு
எண்களிலும்அமையுமாகவே வேற்றுமையைப்பொருளாயுரை
க்க, நாநேசுவரவாதிஎணவும் அத்துவிதியைச்சொல்லநேரிடும்.
ஆயின் அது கூடாது. அன்றிச் சீவசிவன்களே இங்கு இரண்
டெனக் குறிக்கப்படுதலால் அவரினும் வேறு ஜடமேயாதலின்
ஜடமாய் நிற்றலே முத்தியெனப் பொருள்தந்து அசாதகமா
யும்ஆபாசமாயும் அத்துவிதச்சொல்முடியும். அதுகொண்டே
எச்சித்தாந்தியும் அவ்வேற்றுமைப்பொருள்கூறுதொழிந்தது.
மேலும் வேற்றுமை என்பது இஃது எனத்துணிந்திலக்கணங்
கூற இவ்வன்னியபாஷா நாவலராலியலாது. இனித் துவி
தக்குறை அத்துவிதம் எனக்கொண்டு குறைவுப்பொருள் ஈண்
டு நகரத்துக்குரைப்பாம் எனில், நன்கு! இரண்டின் குறைவு
என்பதால் குறைவு நிறைவுள்ள பொருளாகவேண்டியதாகின்
றது. சீவசிவன் என்னும் இருபொருளும் அவயவப்பகுபாடில்
லாப் பொருளாகவவைகட்குக் குறைவு நிறைவு தோன்றல்
திரிதல் கூடாமையான் எனக. ஆயின் அப்பொருளும் பொ
ருந்தாது.

மேல் "போறையின்மை,, எனும் அப்பிராசஸ்த்யம் பொரு
ளாமோவெனின், இரண்டின் அப்பிராசஸ்தயம் என அத்து
விதச்சொற்கிப்பொருளுரைத்தால் இருபொருள் தன்மைகளி
டமும் இந்நகரப்பொருள் வியாபித்தலால் சிவத்தினிடமும்
இவ்வப்பிராசஸ்தியம் தோன்ற நேரிடும். அது பெருங்குறை.
'இருவர் சிறுவர்' எனின் ஒருவன் பெரியோனெனப்புலப்படா
தாகையாலெனக.

எதிர்மறைப்பொருள் கொள்வோமெனின் இரண்டின் எதி
ர்மறை ஒன்றேயாதல்வேண்டும். துவிதவிரோதம் அத்துவித
மெனவாகும். இனி ஒன்றே துவிதவிரோதியல்ல, மூன்று
முதலியதும் அங்ஙனமேயெனின், நாநேசுவரவாதமாம் ஆக
லின் அதுவும் பொருந்தாது. ஆகவே அபாவமென்னும் இன்
மையே நகரப்பொருள் என்பது அபேத்தி வயிரக்கோட்டை
யாயிற்று.

வரும்.



## ஞானமிர்தமறுப்பு.

ஐயா, பத்திரிகாநண்பர்காள், சிறிதுகவனம் தரல்வேண்டும்.
புதியஞானமிர்தம்- 5-ம் இலக்கப்பத்திரிகை தம்முள் எட்டு
விஷயங்களை அடக்கி வெளிவந்தது அவ்வளவும் நமது ப்ரம்ம
வித்தியாவை மறுப்பதாகவே யிருக்கின்றது. அப்பத்திரிகை
அவ்வளவுதீவிரத்துவேஷங்கொண்டுஎமதுபத்திரிகையின்மீது
படை எடுத்து தமக்கு அனேகரைப் படைசேர்த்து அதேவே
லையாய் வெளிவரினும் யாம் எமது நித்திய கன்மத்தைமுடித்து
அனுபந்தமாய்இச்சொற்போரை மிருதுவாயுதங்களால்தடுக்க,
அன்று விசுவாமித்திரமகாராஜன் கோபித்து விடுத்த நாநாஸ்
திரங்களையும்எங்கள்கௌணியர்குலமூலபுருடனை அருந்ததி
மணாளன் பிரமதண்டத்தாலுந் தர்ப்பையாலும் மறுத்ததுபோல்
எட்டுவிஷயத்துக்கும் எட்டுவாக்கியங்களாலேயே மறுத்திடு
வாம்.

I. 'அத்துவிதவிசாரம்' அதிற்கண்டவிஷயம் எமது அத்து
விதவிசாரத்து மறுக்கப்பட்டது.

II. 'நியாயவாதியின் வாயை யடக்கல்' இவ்விஷயம்
நியாயத்தையடக்கி வெளிவருவதால் நியாயவாதி அதற்கு
விடையளிப்பார். ஆயினும் இவ்விஷயம் எழுதிய சாமகுளம்.
சுப்பிரமணியசர்மா என்பவர் வெகுகாலமாய் எமதுபத்திரிகைக்
கெழுதிவரும் ஒரு நண்பர். இவர் ஓர் வைணவர் என்றும் பிறகு
ஏதோ ஜன்மாந்திரபாக்கிய புண்ணிய வசத்தால் சிவனிடமும்
அடியாரிடமும் அன்புமேலிட, சைவசின்னந்தரித்து இருப்ப
வர் என்றும் எமக்குத்தெரியும். இவர் இதற்குமுன் நமது பத்தி
ரிகை. 6-ம் புஸ்தகம். 4-ம் சஞ்சிகையின் அனுபந்தத்தில்
'ஜகத்குருவிசாரம்' எனத்தலைப்பிட்டு இங்ஙனம் ஓர் சைவசி
த்தாந்தி என கையொப்பமிட்டு இன்று எழுதியவைகளுக்கு
விரோதமாய் எழுதினவர், ஏதோஇப்பொழுது இவ்விதம் எழு
துகிறார். இவர் சித்தாந்தம் ஒரு நிலைப்பட்டபிறகே இவரை
எதிர்நோக்கி விஷயஞ் சொல்லவேண்டும். இவர் எச்சமயம்
எவராதரிப்பினும் அச்சமயம் அவ்வழி நிற்பார்போலும்.

III. கலிபுருஷமகிமை. இது நாகைநீலலோசனியினின்று
நமது ஞானமிர்தத்தார் அவசியமான விஷயமெனவெடுத்தது
பலரால் பலபத்திரிகைகளில் மறுக்கப்பட்டது. நமது தூஷ
ணமும் நமது பத்திரிகா தூஷணமும் நிறைந்து நிற்கும் இவ்
விஷயமும்இரண்டாம்விஷயமும், எமக்கு ஒரு தக்க வடமொ
ழி தென்மொழிகளில், சித்தாத்துக்காட்டு - ஸ்ரீநிவாஸாசாரியர்
ஞானமிர்தத்தார்போன்ற பண்டிதர் எழுதாத விஷயமாதலின்
ஒருபொருட்டல்ல; சாவகாசமானபொழுது கவனிப்பாம்.
இதற்கு அவர் எவ்விதம் தாறுமாறுமாய் எழுதினுலும் எம
க்கு அதுலட்சியமில்லை. கடுஞ்சொல் எமக்குவேண்டாம். விஷ
யமேவேண்டும். இவற்றுளோ விஷயமில்லை. கடுஞ்சொல்லே
யுண்டு.

IV. 'கேவலாத்துவிதவிசாரம்' இவ்விஷயத்தை அத்து
விதவிசார வழியிலேதானே முறையே பொருட்கூற்றுப்பிர
கரணத்தில் மறுப்பாம்.

V. அத்வைதிகள் வைதிகர்களா? என்பது. இதில் மூன்று
ங்கற்பத்தில் "அத்வைததரிசனத்திற்கு வேதத்தைப் பிரமா
ணமென்றங்கீகரித்தா?" என்று கேழ்விகேட்டு மறுத்திட்ட
துபோல் சில எழுதினர்கள். அவர் வேதப்பிராமாண்யவாதம்
அத்வைதிகளுக்குக்கூடாதென இன்று வாதித்தால் அதற்குவி
டையளிப்பதற்குமுன்னரே இவர்வைதிகர்களா? எதனல் என்
பதற்கு விடையளிக்க வேண்டியதே முக்கியம். பாரதம் பஞ்
சமத சித்தாத்தியாயத்தில் பாசுபதம், பாஞ்சராத்திரம், சாங்
கியம், யோகம் இவற்றின் வேறாய வேதமதத்தைக்குறித்தமை
யானும், அதை யனுசரித்து காளிதாஸராதி கவிஞர் வழக்கா
னும், நையாயிகராதியோரும் சாமானிய சாஸ்திரப்பிரவர்த்தக
ரும்,மத்துவராதி வடநூற்பாடியகாரமுக்கியரும், தென்னூலா
சிரியர் பலரும் வேதாந்திகள் எனவும் ஔபநிடதரெனவும்இவ
ரைக் குறித்தலானும், சைவராதியோர் பாஞ்சராத்திரத்தவரா
தியோரைக் கேவல தந்திரவாதி எனக்கணக்கிட்டு கேவல வே
தாந்தி என வத்துவிதிகளைச்சொல்லிவருதலானும், அத்துவிதி
கள் அத்துவித முக்திநிலையை அறிவது வேதத்தாலன்றி மற்
றெப்பிரமாணத்தானும் அறியக்கூடாதெனச் சாதித்தலானும்,
வேதங்கள் உபக்கிரமநியாயத்தால் நிர்க்குணச்சுருதிகளைப் பிர
பலமாகக்கொண்டுமுடிதலானும், அபச்சேதாதிகரணம்பதார்த்
தோத்பத்தியின் பௌர்வாபர்யத்தைப் பற்றியதாதலால் அது
பதார்த்த நிர்ணயவிஷயத்துக்கு அவ்வளவு உபயோகப்படா
மையானும்,உபக்கிரமாதிகரணம்பதகௌரவத்தைத்தரும்என
ப்பிறரும்பலவிடத்துச்சிறப்பாய்ராமானுஜீயரும் ஒப்பியமையா
னும், வேதாந்த மகாவாக்கியங்களையேபிரமாணமாகக்கொண்டு
ஆகமசம்ஸ்காரலேசமின்றி வேதததனுசாரி சாஸ்திர மாத்தி
ரோக்த சமஸ்காரங்களேளேயே செய்துக்கொண்டு அவ்வழி அ
னுஷ்டிப்பதாலும், வைதிகமாயகிரியைகளைநிர்விவாதமாய்செய்
வதாலும்வைதிகர் இவரோ. மற்றவர் கேவலவைதிகரல்லர்: அ
வர்களுக்குத் தந்திர சம்பந்தமுமுண்டு. நாம் இங்கு மததாரத
ம்மியம்வகுத்திட்டாமில்லை அத்துவிதிகள்வைதிகரோ என்றும்.

VI. மறுப்பின்மேல்மறுப்பு. என்பதுஅதில்நம்மைப்பற்றி
எழுதிய துர்வசனங்களை யகற்றிப் பதிலுரைக்கவேண்டியவை
யைத்திரட்டிடின் மூன்றுளது. அதாவது 1. யாம், இவர் எழு
திய வாக்கியம் ஒன்று பொருத்தமில்லை என்றோம். அதற்கே
தோவித்துவான்கூடி சபைசெய்தாலன்றிப்பொருளுரைக்கமா
ட்டோமெனக்குறித்தார். அந்த ரகசியத்தை மறுப்பதெப்படி?
2. உலகம் ஸதஸத்தென்பது அத்துவிதமதம் என யாம்
சொன்னமையால் எமக்கு அம்மதம்தெரியாது என்றார். மிகச்
சந்தோஷம்! இவர்தெரிந்துகொண்டவராயிற்றே. இனியேனு
ம் 'மித்தை என்பது ஐவகைப்படும்' என விரித்தவத்துவிதநூ
லைக் கண்டு தெளிவாராக. மேல் 3. 'நேபாளம் முத
லான விடங்களிலிருந்தும் கர்நாடராஜாங்கங்களிலிருந்தும்
பெற்றவைகளும் காலாவதியால்பாறுனவைகளுமானசிலவை
ப்பேடுகளிருப்பதாய் பயங்காட்டினர்' என்றார். இவர் 'சங்கரர்
ஜகத்குரு என்பதற்குஇதரமதஸ்தர்கையொப்பமில்லைஎன்றதா
ல் யாம்அவைகளைக்காட்டினோம். இவர்அவைகளுக்கும்காலாவ
திச்சட்டம் ஏற்படுத்தியது யாம் அறியோம். அதுகளுக்குச்
சற்றேரக்குறைய முன்னும்பின்னும் எழுதிய பாஷியங்களுக்கு
இச்சட்டத்தில்ஏதேனும்விலக்கவிதியுண்டோஇல்லையோ அறி
யோம்-இவ்வித வசனங்கள் சாஸ்திரார்த்தவசனங்களாம். இறு
தியில் 'மசகத்துக்கு மாதங்கம் பெரிதாயினும் அதுசிங்கத்துக்
குமுன் வெளிவராதென்பதை இனியாவதுநண்பர் அறிவாராக'
என்றார். ஐயோபாவம்! இவர் தமக்குத்தாமே கொடுத்துக்கொ
ள்ளும் சிங்கப்பட்டமாவது ஜகத்குருப்பட்டம்போலாகாது நி
லைக்கவேண்டித்தாமே தமது உபாஸனமூர்த்தியை வழிபடுவா
ராக. ஆயினும் இவர் ராமதத்துவதீபிகைமுதலிய கிரந்தங்களி
ல்மட்டில் இவர் சிங்கமாக, மற்றொருசாபம்எங்கிருந்தோவந்து
புகுந்து கிடைக்கட்டும். எல்லாம் ஒருகாலவசம். அவருக்கு
பரிகாசமும் விகடமும்இயல்பு. அவர் எழுதியதைப்படித்தவர்
அதை அறிவார்.

VII. 'அப்வாதநிக்கிரகம்' இது எனது தாயார் மலடி என்பதுபோல்வெளிவந்துஞானமிர்தத்தின்திருமேனியை வீணுக்கியது. சாமகுளத்தார் நாகைநீலலோசனியில் எழுதியதையும் இதையுமே படித்தால் சாமகுளத்தார் கூட்டியதும் குறைத்ததும் தெரியவரத் தானே இவ்வபவாதநிக்கிரகம் அபவாதஸ்தாபனமாய்முடியும். அவற்றைப்படித் தொத்துப்பார்த்துத் தெளிக. ஆனல் அதில் அதிகப்பிரசங்கம் என்றும் வேறு சிலவும் காணப்பட்டது. அது அப்பத்திரிகைக்கழகே. அவ்விதச்சொற்களைப் பதிப்பிக்க யாமர்கரல்லர்.

VIII. அசத்தியநிராகரணம் இவ்விஷயத்தில் அங்குநடந்த விஷயத்தை, யுண்மையறிந்து நடந்தபடி எழுதினுல் பிரசுரிப்போம் தடயில்லை.

'பிர்மவித்தியாவினுல் நேர்ந்த ஒற்றுமை.''

VIII. ஐய! நமது பத்திரிகை ஆஸ்திகருக்குப் பொதுவாய் அவ்வப்பொழுது ஆஸ்திகருள் எந்தமதத்தைப்பற்றியும் பேசிவந்து ஒருவருக்கொருவர் கலகமின்றி ஒற்றுமை விளைவிக்கப் பிறந்தது என்பதுஉமக்குத்தெரிந்ததேயன்றே! இப்பொழுது சிறிதுகாலமாய் வேதாந்த சித்தாந்தங்களில் ஒருசார்பாய் நமது பிரமவித்தியானுபந்தம் எழுதிவருவதும் ஒரு ஒற்றுமை செய்யவே. பாருங்கள்! ஞானசம்பந்தாவதாரவிஷயத்தில்பிணக்குற்று மகாவிரோதியாய் நின்று புஸ்தகங்கள் இயற்றிய ஞானமிர்தத்தார்,சூளைச்சோமசுந்திரநாயகர்இவர்களும்-ராமதத்துவ்தீபிகை அதனுபாஸவிளக்கம், இவைகளை யெழுதிப்பிக்குணறற் ஸ்ரீமான் - உ.வே. ஸ்ரீநிவாசாசாரியார் மேற்படி சூ-சோமசுந்திரனுயகரும், வைஷணவமதத்தை வேருடன் ஒழித்திட்டவரும் சைவருமான சாமகுளம்-ப்ரம்மஸ்ரீசுப்பிரமணியசர்மாவும், சைவத்தை அழித்திடுவோம் எனப் பெரும்விருதுகூறும் சிவமதத்துவேஷம் நிறைந்தபண்டிதர் சித்தாத்துக்காட்டாரும் ஒருங்குசேர்ந்து ஒருவரை ஒருவர் புகழ்ந்து கலந்து ஏகசித்தாந்தியாகிப் புறமதக் கடிதங்களைப் பிரசுரிக்கவிடங்கொடாத ஞானமிர்தாங்கத்தில்எமது ப்ரம்மவித்தியாவை ஜெயிக்கக்கூட்டங்கூடி எழுதிவருகிறார்கள். இதுவே ஒருபெரும் ஒற்றுமையாகலின் 'இதுவும் நமது பத்திரிசையின் பயனுள் ஒன்றே.

பத்திராதிபர்.

## சூருவளிக் காருவிளக்கம்.

வரலாறு.

திருவாவடுதுறைச் சிவஞானமுனிவரர் தமிழிற்சிறந்த விலக்கணமாகிய இலக்கணவிளக்கத்தை யிழித்துரைத்து இலக்கணவிளக்கச் சூருவளியென வோர்நூலியற்றினர். அவ்விடத்திழித்துரைத்தனவெல்லாம் அவர் தமக்கன்றி வைத்தியநாதநாவலர்க்கு ஆகாமை இலக்கணவுணர்ச்சியின் முதிர்ந்தார்க்குப்புலனும். அவ்வைத்தியநாதநாவலரை இச்சிவஞானமுனிவரனினும் நுண்ணுணர்ச்சி மிக்க ஸ்ரீசுவாமிநாததேசிகர் 'தமிழ்க்கிலக்காகிய வைத்தியநாதன்' எனப் புகழ்ந்ததுங் காண்க. இன்னோன்ன பலகாரணங்களைக்கண்டு இலக்கண விளக்கத்துக்கிருந்த வோர்குறையை முடிப்பான் றொடங்கினேனேயன்றி முன்னோர்க்குக் குற்றங்கூறத் தொடங்கினேனல்லன்.

அன்றியும் யாவர்க்கும் மறவி உண்மையானும் அகத்தியர் தொல்காப்பியர் முதலாயினர்போல தவத்தான் மனந்தூயராயினரல்லராதலானும் ஓரோவிடங்களிலே ஆசிரியர் இலக்கணவிளக்க நூலார்விட்ட வழுக்களை வழுவாகவே கொண்டேனல்லது பிடித்தது சாதிப்பான் றொடங்கினேனல்லேன்.

பாயிரம்.

"முன்னர்ப் பாயிரத்தைவைத்து இது பாயிரமென்றுரைத்
"துப் பின்னர் அதுகேட்ட மாணுக்கர்க்கு நூலுரைப்பான்
"றொடங்கினர் - இப்பாயிரமுரைக்க வேண்டுவதென்னைவெ
"ன்னுங்கடா நிகழ்தற்கு இடனுளதாயவழி இவ்விவ்வேதுக்க
"ளான் முன்னர்ப்பாயிர முரைக்கவேண்டுமென் றிறுத்தல
"மையும். அவ்வாறே றியைபுமின்றித் "திருவிளங்கியமாநக
"ரம்' முதலாக வேடுத்துரைக்கு முத்தரஞ் செப்புவழுவும்
"மற்றொன்று விரித்தலுமாய் முடியுமென்க' என்றார். "வல
"ம்புரிமுத்திற் குலம்புரிபிறப்பும்" என்ற ஆத்திரையன் பேரா
"சிரியனுக்கு மிக்குற்றமுளதாகச் சூத்திரவிருத்திக் கட்டாமே
"யனுசரித்தலானும் இடனுளதாயவழி யெனவே இடன் இல்
"லாதவழியும் உண்டெனப் பொருள்படுதலானும் அவர்க்கு
"மது கருத்தென்றுபோலு மென்க.

"வடநூலாரும் மேற்கோள் முன்னர்க்கூறியே பின்னர் ஏது
"முதலிய நான்குறுப்பும் ஒன்றன்பின் ஒன்றியைபுபடக் கூ
"றுமாறறிக" என்றார். அது தமிழ்நூற்குப் பொருந்தாமை திருவள்ளுவர் முதலிய நூல்களிற் காண்க.

"பரிமேலழகர் உரையாளர் பாயிரமியம்புதல் கடனென்ப்துபற்றி "இந்திரன்முதலிய" முதலாகச் சிறப்புப்பாயிரமே உரையாற்கூறினா' என்றார் இது பயனில் கூற்றாமாறு சிற்றறிவினர்க்கும்புலனும், ஆசிரியர் பரிமேலழகர் "பாயிரமில்வதுபனுவலன்றே. யென்பதனை யுட்கொண்டு கூறினரன்றிப் பாயிரமியம்புதல் கடனென்பது பற்றியன்றென்க.

"அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூலடங்காதென்றார். அவற்றியல்புணராமையி னென்றார் அவயவத்துளவயவியடங்காமை தெள்ளிதிற் புலப்படும். 'நூனுதல் பொருளைத் தன்னகத்தடக்கி' யென்றது நூனுதல் பொருளைபன்றி நூலையன்றென்க. பாயிரத்தை யவயவியென்றும் நூலை யவயவம் என்றுங் கூறினர், தொல்காப்பியத்தின் மெய்பொருளுணராமையின்.

'சிறப்புப்பாயிரத்துள் ஆக்கியோன்பெயர் முதலியவற்றிற் கெடுத்துக்காட்டியவற்றுள் சிலபொருந்தாமை தொல்காப்பிய பாயிரவிருத்தியில் விரித்துரைத்தாம், ஆண்டுக்காண்க' வென்றார், அவை பொருந்துமாறு இளையனாரகப்பொருளுரையிற் காண்க.

(வரும்.)

நந்தனஞு
ஆடிமீ ருவ }

இங்ஙனம்
ச - பரமசாமிதீக்ஷிதர்.
யாழ்ப்பாணம் தெல்லிப்பழை.

Chidambaram:—Printed and published for the proprietor at the Brahmavidya Press No. 38, Senkalooneer pilliarkoli street.

ஓ॥

SUPPLIMENT TO THE BRAH MAVIDYA

# ப்ரம்மவித்தியாபத்திரிகையின்

## அநுபந்தம்.

சா - புத்தகம்] சிதம்பரம். நந்தனஞு ஆடிமீ க0உ [இலக்கம் - கக

## ஈ-ஈ-ஸ்ரீ சூளை சோமசுந்தரநாயகரவர்களும்; மாயாவாதமும்.

சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திரிகை ஆறுவது புத்தகம் ௬ வது பத்திரிகை ௬உ வது ௬௩ வதுபக்கங்களில் "ஞானமிர்த பத்திராதிபரை வினவும் வினுக்கள்' என்னும் மகுடத்தின்கீழ் "ஓர் நாவலர்" வினவிய வினுக்களில் கக-வது வினுவில் "உலகத்துக்கு முதற்காரணம் காலமே என்பார் காலவாதிகள் என்றும், பூதமே என்பார் பூதவாதிகள் என்றும், பிரதானமென்னு முக்குணமே யென்பார் பிரதானவாதிகளென்றும் அழைக்கப்படுதல்போல, மாயையே முதற்காரணமென்போரன்றோ மாயாவாதிகளெனப்படுவர். சங்கராசாரியர் பிரமமே முதற்காரணமாமென்பவரன்றோ? அங்ஙனமாக அவர்தமைப் பிரமவாதிகளென்னுது மாயாவாதிகளென்றது யாதுகாரணம்பற்றி? இனி, மேற்கூறிய முறைபற்றி ஆராயப்புகின், சைவர் மாயையே முதற்காரணமெனக்கூறுவோராதலின் அவரன்றோ மாயாவாதிகளாகின்றார்? என்று கேட்டிருக்கின்றார். இதற்கு ஷை ஞானமிர்தப் பத்திராதிபரிதுகாறும் யாதும் பதில் கூறினரில்லை.

பிறகு ம-ஈ-ஈ-ஸ்ரீ சூளை சோமசுந்தரநாயகரவர்கள் 1892 ஞு ஜுன்மீ 20உ நாகை நீலலோசனிப்பத்திரிகையில் "சைவசித்தாந்திகள் மாயையை உலகத்துக்கு முதற்காரணமென்று ஒப்பியது சத்தியம். அம்முதற்காரணமாகிய மாயைக்கு ஜடத்வம் பிராப்தமாகையால், அதனை ஸ்வதந்திர வஸ்துவாக வவரங்கீகரியார். அதனுல், அவர் பரமகாரண வஸ்துவாகக் கொண்டு வழிபடும் மெய்ப்பொருள் அம்மாயையாகாது. அவர் வழிபடும் பரம்பொருளாயுள்ளது சிவமொன்றேயாம். வழிபடுகின்ற அதிகாரியாகிய சேதனனுக்கே மாயை குறைந்திடுமாயின், அந்த மாயை அவனுக்கு உபாஸ்யப்பொருளாயிடுதல் யாங்ஙனம்? அங்ஙனமாகாமையால், அம்மாயோபாஸகனுகாத சைவசித்தாந்தி மாயாவாதியாகமாட்டான்" என்று தீட்டியிருக்கின்றார்.

இதன்பேரிலெமக்குத் தோன்றும் அபிப்பிராயத்தைச் சொல்லக்கடவோம். பரம்மவித்தியா நாவலரவர்கள், மாயையை முதற்காரணமாகக்கொள்ளுவதுபற்றி மாயாவாதியெனத் திருட்டாந்தபூர்வமாய்க் காட்டியதை நாயகரவர்கள் ஏதும் மறுத்தனரில்லை. நாயகரவர்கள், தம்மதத்திற்கு எவ்வளவு சிறப்புக்கூறினும் மாயையை முதற்காரணமாகக் கொண்டதுவரையில் மாயாவாதியென்பதற்குத் தடையுளதோ? உலகிற்கு முதற்காரணங் காலமென்பாரும், பூதமென்பாரும் தங்கள் மதங்களுக்கு வேறு எவ்வகைச் சிறப்புகள் கூறினும் முதற்காரணஞ் சொல்லுகிறவரையில் முறையே காலவாதிகளும் பூதவாதிகளுந்தானே. அவ்வாறே மற்ற வாதிகளுமாம். அங்ஙனமே மாயையை முதற்காரணமென்கிறவரையில் மாயாவாதிகளென்று சொல்லத்தானேவேண்டும். நாயகரவர்களும் மாயையை முதற்காரணமாக வொப்பியது சத்தியமென்று சொல்லுகிறாரே. அதன்மேல் ஷை நாயகரவர்கள், மாயைக்குச் சடத்துவம் பிராப்தமென்றும் அதை ஸ்வதந்திரவஸ்துவாக அங்கீகரிப்பதில்லையென்றும் பரமகாரணமான வஸ்துவாகக்கொண்டு வழிபடும் மெய்ப்பொருள் அம்மாயை ஆகாது எனறும் கூறுகின்றார். இது பொருத்தமில்லா வாக்கியம். இதற்கும் அதற்கும் சம்பந்தமொன்றுமில்லை. நாயகரவர்களிப்போது சொன்னதுமாத்திரமல்ல; இன்னும் கோடிமடங்கு அதிகமாகத்தானிருக்கட்டும். அவைகளுள்ளனவென்றாவது இல்லனவென்றாவது பிரமவித்தியா நாவலரவர்கள் பேசவில்லையே. அங்ஙனமாக அசந்தர்ப்பமான விஷயங்களை யேனோ உள்ளே கொண்டுவந்து நுழைக்கவேண்டும்? இவைகளெல்லாம் மாயாவாதியென்பதைத் தடுக்குமா? எந்தக்காரணத்தால் காலவாதியென்றும் பூதவாதியென்றும் நாமமிடப்படுகின்றதோ அதே காரணத்தைக்கொண்டு மாயாவாதியென்று சொல்லப்படுகின்றது. தேசத்தை அரசாட்சிசெய்வதுகாரணமாக அரசனென்று பேர்படைத்த வொருவனுக்கு வேறுபேரிருந்தாலும் அரசனென்னும் பேர் ஒழிந்திடுமோ? அதுபோல் மாயையை முதற்காரணமாகப்பெற்ற மதஸ்தர்க்கு வேறுபேரிருந்தாலும் மாயாவாதியென்னும் பேர் ஒழிந்திடுமோ? மாயாவாதியென்னும் பேர் வேண்டாமென்பாராயின் உலகத்துக்கு முதற்காரணம் மாயையென்றுசொல்வதைவிட்டு, தங்களுக்கு எது இஷ்டமோ அதை முதற்காரணமாகவைத்து, அம்மதப்பேர் பெறலாமே.

இனி மேலே செல்வோம். நாயகரவர்கள் மாயையைப் பொருளென்கிறாரா? குணமென்கிறாரா? பொருளென்கிறாரென்னில் சிவமாகிய பொருள் பரிபூரணமென்றிவர் ஒப்பியிருக்கின்றமையாலும் அச்சிவமில்லாத விடமில்லாமையாலும்மா